960

ஸ்ரீ க்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:.

# அன்னதான பலனும்

## தத்வ பரிசோதனையும்.

இது

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்
அவர்களால்

இயற்றி

சென்னை சூளை ஸ்வாமி விவேகாநந்த இந்துபாலிகா பாடசாலைத்
தலைமை உபாத்தியாயர்

ம-ள-ள-ஸ்ரீ சே. மு. வேலு முதலியார் அவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை
ஹோ அண்டு கம்பெனி
"ப்ரீமியர்"
அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1918. [விலை அணா 4.

23 JUN 1918

C

Q22:4
N18
59513

அன்பார்ந்த ஐயா ! இதை கவனித்து வாசித்துப் பாருங்கள் !!

இந்நூலாசிரியராகிய சாது ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர், மூன்று நான்காம்படிகளாகிய யோக, ஜ்ஞானமார்க்கங்களை மாத்ரம் ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்யத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றார். மோக்ஷமடைய முக்யமானநூல் இதுவேயாம். ஷை ஸ்வாமிகள் 'ஸ்ரீ பகவத்கீதை' ஆறு அத்யாயம்வரையில் விசேஷார்த்தங்களுடன் 391-பக்கங்கள்வரையில் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதரூபமாய் எழுதி முடித்திருக்கின்றார். அதனை ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தத்தில் ஆங்காங்கு த்ருஷ்டாந்தங்களாகக் காட்டியிருக்கின்றனர். முதல் இரண்டு படிகளில் இருக்கப்பட்டவர்களுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம். வேதாந்தம் எப்படிப்பட்டதென்றால்,

"விரும்புஞ்சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே,"

என்பதுபோல்,

அரும்பு, மலர், காய், கனியைப்போன்றது. கனியாயிருக்கும் தான் இந்த நான்குபடிகளையும் அறியும், அதாவது, தான் முதல் அரும்பாயிருந்ததையும் அறியும், அதன்பின் மலராயிருந்ததையும் அறியும், அதன்பின் காயாயிருந்ததையும் அறியும், அதன்பின் கனியாயிருந்துகொண்டிருப்பதையும் அறியும். கனியாயிருக்கும் தான், முன்னிருந்த மூன்றுபடிகளையும் அறியும். நமதுஸ்வாமிகள், அரும்பு மலர்களை நீக்கிக்காய்கனியைப்போன்ற யோகஜ்ஞானமார்க்கங்களைமாத்ரம் ஜீவப்ரஹ்மைக்யத்தில் விசேஷமாய் போதித்திருக்கின்றார். ஸ்த்ரீ புருஷ ரூபமாய் சஞ்சரித்துக்கொண்டு மாயையால் கட்டுப்பட்டு மிதியுண்டு மிகவும் அகாதமான ஸம்ஸாரமென்னும் பாழ்ங்கிணற்றில் வீழ்ந்து தநாசையென்னும் வ்யாதியினால் பீடிக்கப்பட்டு விஷயவாஸனா ரூபமாகிய அல்பசுகங்களுக்குட்பட்டு நிரந்தரம் பரிதபித்துக்கொண்டிருக்கப்பட்ட சில பாமரர்களுக்கு இந்நூல் பிடிபடுவது மிகவும் கஷ்டம். இப்படிப்பட்ட ஸ்திரீபுருஷர்களுக்கு முதலில் பக்திரசத்தை ஊட்டவேண்டும். அப்போது அவர்களின் மனம் ஓர் நிலையில் நின்று மேல்படி யேறுவதற்கு மார்க்கம் உண்டாகும். ஆதலால், பக்திசெய்து முக்தி அடையத்தக்க க்ரந்தங்கள் சிலவற்றை எழுதும்படி சிலபக்தர்கள் ஷை ஸ்வாமிகளைக் கேட்டுக்கொண்டபடியால், இந்த விஷயங்களைக் குறித்து ஸ்வாமிகள் நெடுநாளாய் ஆலோசித்து எதுவிஷயம் போதித்தால் ஜனங்கள் சீக்ரமாய் க்ரஹிக்கக்கூடுமென்று யோசித்துக்கொண்டிருக்கும் சமயத்தில், பரதகண்டத்திற்கு வடக்கே லோகரக்ஷணார்த்தமாய் பகவதாஜ்ஞானுசாரமாய் இந்தக் கலியுகத்தில் அவதரித்த பரமபாகவதர்களின் சரித்ரங்களையெல்லாம் விசிதம்செய்து படனம் செய்யப்பட்டவர்களினுடையவும் க்ரஹிக்கப்பட்டவர்களினுடையவும் ஹ்ருதயத்தை மூடிக்கொண்டிருக்கும் பாமரத்வங்களையெல்லாம் நீக்கி பக்தி வைராக்யங்களை உண்டாக்கி இஷ்டார்த்தங்களையெல்லாம் தரத்

தக்க 'மஹாபக்தவிஜயம்' என்னும் இந்த புராணரத்நம், முதல் முதல் பண்டரீபுர நிவாஸகராயிருந்த 'யுத்தவதாஸர்' என்பவர் மிகவும் பரிசுத்தமனமுடையவர். இவர் லோகோபகாரார்த்தமாய் ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதினர். பிறகு கலியுகாதி 4732-வது ஆண்டில் ப்ரஹ்மாம்ஸராகிய நாபாஜிசித்தர் என்பவர் ஹிந்துஸ்தானி பாஷையில் எழுதி, வ்ருத்த வஸிஷ்டாதி முனிவரிஷ்டர்களுக்கு வாசித்துக் காட்டினர். பிறகு வ்ருத்தவஸிஷ்டர் நாபாஜிசித்தரிடம் கேட்ட சரித்ரங்களை கீவாலியர்பாஷையில் எழுதித் தமது சிஷ்யர்களுக்கு உபதேசித்தார். பிறகுகலியுகாதி, 4862-ல் மஹிபதிபாவா என்பவர் மஹாராஷ்ட்ரபாஷையில் ப்ரசித்திசெய்தார். பிறகு கலியுகாதி, 4890-வது ஆண்டில் தக்ஷணதேசத்தில் வசித்துக்கொண்டிருந்த ஸ்ரீ க்ருஷ்ணபாதயோகீஸ்வரர் ஸம்ஸ்க்ருதபாஷையில் எழுதி ப்ரசித்தி செய்வித்தனர். பிறகு மைசூர்தேசத்தை ஆண்டுவந்த அரசர்களில், 21-வது அரசராகிய ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் பஹதூர் அவர்கள் தம்காலத்தில் ஷெ க்ரந்தத்தை கன்னடபாஷையில் எழுதிவைத்தனர். இப்படிப்பட்ட உத்க்ருஷ்டமான க்ரந்தம், நமதுஸ்வாமிகள் இருக்கப்பட்ட ஆஸ்ரமத்தினிடமே அகஸ்மாத்தாய் கிடைத்தது. ஸ்வாமிகள் அதைப்பார்த்து, மானிடயாக்கையெடுத்த ஒவ்வொருவருக்கும் பக்தி ரசத்தை ஊட்டுவதற்கு இதுதான் சரியானநூல் என்றெண்ணி பண்டரீநாதரை பக்திசெய்து முக்தியடைந்த மஹாநுபாவர்களாகிய ஸ்ரீஜயதேவ், ஸ்ரீகபீர், ஸ்ரீதுளஸிதாஸ், ஸ்ரீஜ்ஞாநதேவ், ஸ்ரீநாமதேவ் ஆகிய இவ்வைந்து பக்தர்களின் சரித்ரங்களைக் கன்னடத்திலிருந்து தமிழ்பாஷையில் மொழிபெயர்த்து எழுதியிருக்கின்றனர். ஆதியில் உண்டாகிய சரியான 'பக்தவிஜயம்' மூலக்ரந்தம் இதுவே; இப்படிப்பட்ட க்ரந்தம் இதுவரையில் தமிழ்பாஷையில் வெளிவரவில்லை. பக்தவிஜயமென்று பெயர்வைத்து ஏதேதோவிஷயங்களை எழுதி இதுவரையில் அச்சிட்டிருக்கின்றார்கள். அதற்கும் இதற்கும் விசேஷ தாரதம்யம் உண்டு. இப்போது கபீர்தாஸ் சரித்ரம் அச்சிலிருந்து சீக்ரம் வெளிவரப்போகின்றது. இவரது சரித்ரத்தை இதில் சற்றே சுருக்கிக் காட்டியிருக்கின்றது. அதாவது,

பூலோகத்தில் பாமரர்களுக்கு பக்தி ஜ்ஞானங்களை உபதேசிப்பதற்காக பகவதாஜ்ஞாநுசாரமாய் ஸ்ரீ சுகர் சிசுரூபம்தரித்துக் கங்கையில் மிதந்துகொண்டுவந்து 'ஜுலால்' கையில் அகப்பட்டு கபீர் என்னும் பெயருடன் வளர்ந்துவந்தனர். ஆதியில் 'ரம்பை' சுகரை மோஹிக்க ஸந்யாசிவேஷங்கொண்டு அவர் செல்லும்மார்க்கத்தில் பர்ணசாலைகட்டி அகோரமான தவம் செய்பவளைப்போல் நடித்துக் காட்டினள். அப்போது சுகர், வேஷதாரி ஸந்யாசியைக்கண்டு பேசியபோது, தவத்தைக் கெடுத்தாயென்று கோபித்துச் சபிப்பதாய்ச் சொல்லினள். சுகர் மன்னிக்கும்படி கேட்டார். என் கோரிக்கையை நிறைவேற்றினால் மன்னிப்போம் என்று சொல்லினள். சுகர் அதற்குச் சம்மதித்தவுடன் ரம்பை காஷாய வஸ்த்ரத்தை நீக்கி தன் நிஜஸ்வரூபத்தைக்காட்டி போகிக்கும்படி சொல்லினள். உடனே சுகர் திடுக்கிட்டு பதில் சொல்ல யாதொன்றும் தோன்றாமல் சிலநேரம்

சென்றபிறகு கலியுகத்தில் உன்னிஷ்டத்தைப் பூர்த்தி செய்கின்றேன் என்று வரங்கொடுத்தனுப்பினர். அதுபோல், இக்கலியுகத்தில் அதிக ரூப ரேகாவிலாசத்துடன் 'சுந்தரா' என்னும் பெயருடையவளாய்க் கபீருக்கு நெருங்கிய பாத்யஸ்தர்களில் அவதரித்தாள். கபீர் இவளை மணம்புரிந்து கோடாலிக்காம்பிருந்துகொண்டு மரங்களை நும்சம்செய்வதுபோல் மஹம்மதுமதத்திற்கெல்லாம் கோடாலிக்காம்பாயிருந்து நும்சப்படுத்தி பக்திமார்க்கங்களினுல் ப்ரபஞ்சத்தைச் சீர்திருத்தி முடிந்தவுடன், பகவான் ப்ரத்யக்ஷமாய், "கபீர் நீ அவதரித்த கார்யம் முடிந்தது, இனி பரமபதம் வந்து சேரக்கடவாய்" என்று ஆஜ்ஞாபித்து சுந்தராதேவியைத் தன்னுடன் கூட அழைத்துக்கொண்டு விமானத்தின் மீதேறி உட்கார்ந்தவுடன், அந்த திவ்ய விமானம் ஆகாஶமார்க்கமாய்க் கிளம்பி மிகவும் வேகமாய்ச் சென்று மறைந்தது. பிறகு கபீர், பகவதாஜ்ஞானுசாரமாய் சந்தோஷத்துடன், இந்த ஶரீரத்தை தஹனமும் செய்யலாகாது, ஸமாதியும் செய்யலாகாது என்று சுவரின்மீது எழுதிவிட்டு பத்மாஸனத்துடன் உட்கார்ந்து யோகபலத்தினுல் ப்ரஹ்மரந்த்ரத்தைப் பேதித்துக்கொண்டு சுகப்ரஹ்மரிஷியாய் திவ்ய விமானமேறிச் செல்லும்போது ஸுரர்களும் முனிவர்களும்வந்து எதிர்கொண்டு அழைத்துச்சென்ருர்கள்.

பொழுது விடிந்தவுடன் கபீர் பரமசித்தி அடைந்த விஷயம் பட்டணமெங்கும் வ்யாபித்து ஹிந்துக்களும், மஹம்மதியர்களும் இது எங்கள் களேபரம் இது எங்கள் களேபரம் என்று தர்க்கித்து ஒருவரோடொருவர் மண்டைகளை உடைத்துக்கொண்டார்கள். அரசன் இதுவிஷயம்கேட்டு ஓடோடியும் வந்து இவர்களை சமாதானப்படுத்தி கபீர் சிரசின்மேல் எழுதியிருக்கும் வாக்யத்தை வாசித்து கபீரை ஸ்துதிசெய்து பட்டு பீதாம்பரத்தை களேபரத்தின்மீது மூடி, காலையில்வந்து பீதாம்பரத்தைத் திறந்து பார்த்தபோது பாதிசரீரம் துளசிதளமாகவும் மற்றப் பாதி சரீரம் மல்லிகை புஷ்பமாகவும் இருந்தது. உடனே அரசன் இரண்டு மதஸ்தரையும் கூப்பிட்டு அவரவர்களின் பாகங்களை அவரவர்களை எடுத்துக்கொள்ளும்படி ஆஜ்ஞாபித்தார். உடனே ஹிந்துக்கள் துளசிதளங்களையும் மஹம்மதீயர்கள் மல்லிகை புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டு அம்பாரிமீதுவைத்து பேரீ ம்ருதங்க வாத்யங்களுடன் ஊர்கோலம்சென்று உசிதமான ஸ்தலத்தில் வைத்துப் பூஜித்து வந்தார்கள். இந்த சரித்ரம் சுமார் ஏறக்குறைய 350-பக்கங்கள் அடங்கும். இது வாசிக்கவாசிக்க மனசிற்கு ஆனந்தத்தை உண்டாக்கும்.

செ. மு. வேலு முதலியார்.

கபீர்தாஸ் சரித்ரம் வேண்டுபவர்கள்:-

"ஸதாநந்தன்," வேப்பேரி போஸ்ட், சென்னை,

என்று எழுதிப் பெறலாம்.

இதன் விலை ரூபா. 1—4—0.

ஸ்ரீ க்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:

# அன்னதான பலனும்

## தத்வ பரிசோதனையும்.

இது

ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்
அவர்களால்

இயற்றி

சென்னை சூளை ஸ்வாமி விவேகாநந்த இந்துபாலிகா பாடசாலைத்
தலைமை உபாத்தியாயர்

ம-ா-ா-ஸ்ரீ செ. மு. வேலு முதலியார் அவர்களால்
பார்வையிடப்பட்டு

சென்னை
ஹோ அண்டு கம்பெனி "ப்ரீமியர்" அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

All Right Reserved.] 1918. [விலை அணா 4.

MADRAS (library stamp)

ஓம் தத் ஸத்.

ஓடித்திரியும் மனசை ஓடவிடாமல் நிறுத்தி முக்தி யடைவதற்காக இந்நூலாசிரியரால் வெளியாகிய முக்ய மான நூல்கள்:—

மூன்றாம்பதிப்பு ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம் (அநேக ஆப்டோன் ப்ளாக் படங்களுடன் கூடியது.)

விலை ரூ 1 4 0

இதற்கு த்ருஷ்டாந்தம் ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுந சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை (6 - அத்யாயங்கள் 391-பக்கங்களடங்கியது.)

விலை ரூ 1 4 0

"அன்னதானபலனும் தத்வபரிசோதனையும்" என்னும் அரியநூல்.

விலை ரூ 0 4 0

இவை வேண்டுபவர்கள்,

T. கல்யாண சுந்தரம், பேரம்பூர் பாரக்ஸ், சென்னை, என்று எழுதிப்பெறலாம்.

இனி வெளிவரும் நூல்:—ஜ்ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்ரம் க்வாலியர் பாஷையிலிருந்து எடுத்து தமிழில் மொழிபெயர்த்தது. இதுவரையில் வெளியாகாதது.

விலை ரூ 1 4 0

இது வேண்டுவோர், ஸதாநந்தன் வேப்பேரி போஸ்டு சென்னை என்று எழுதிப்பெறலாம்.

## முக்ய கவனிப்பு.

---

இந்நூல்களில், ஸ்லோகங்களிலும் வசனங்களிலும் இருக்கப்பட்ட ஆண்டிக் (தடிப்புள்ள) எழுத்துக்களை அழுத்தி உச்சரிக்க.

செ. மு. வேலு முதலியார்.

O22:4
N18
28 JUN 1918
MADRAS



பரமஹம்ஸ ஸச்சிதாநந்த யோகீஸ்வரர்.

1865ஹு பிப்ரவரிமீ 16உ குருவாரம் ஜனனம்.

ஸ்வாமிகள் ஸமாதியில் இருக்கும் பெரியபடம் வி. பி. உள்பட விலை ரூ. 1-4-0
"ஸதாநந்தன் வேப்பேரி போஸ்ட் சென்னை" என்று எழுதிப்பெறலாம்.

28 JUN 1918
MADRAS.

ஸ்ரீ க்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:

# அன்னதான பலனும்

## தத்வ பரிசோதனையும்.

ஓ ஸஹோதரர்களே! ஓ ஸஹோதரிகளே!!

அன்னதானத்தின் பலத்தைக் குறித்து இதனடியில் விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள் :—

புத்ர, மித்ர, களத்ர, பசு, ப்ருத்யக்ஷேத்ர, க்ருஹாராமங்கள் முதலாகிய ஸம்பத்துக்கள் நித்யமானவைகளல்ல. நாம் செல்லும்போது இவைகள் யாவும் நம்முடன் கூட வரப்பட்டனவல்ல. தர்மம் ஒன்றே பரலோகசாதனம். தர்மத்தைவிட மனிதர்களுக்கு ஸஹாயகாரி வேறொன்றுமில்லை. ஆதலால், விவேகியானவன் எப்பொழுதும் தேஹாதிப்ரபஞ்சத்தில் கொஞ்சமேனும் அபிமானம் வைக்காமல் தர்மத்தில் ஆசையுடையவனாய் ப்ரவர்த்திக்கவேண்டும். ந்யாயமார்க்கத்தில் தனத்தைச் சம்பாதித்து, சம்பாதித்த தனத்தை ஸத்பாத்ர விநியோகம்செய்து தானும் அநுபவிக்கவேண்டும். பரலோக சாதனமாகிய கோதான பூதான ஹிரண்யதான முதலாகிய தானங்கள் அநேகமுண்டு. அவைகளெல்லாம் அன்னதானத்திற்குச் சமானமாகமாட்டா. பகவத்பக்தர்களுக்கு ஒருவேளை அன்னம் கொடுத்தால் அது, பரமபதத்திற்கு ஏணியைப்போன்றபடியாயிருக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

பசியுடையவர்களுக்கு அன்னமிட்டுப் பசியைத்தணித்து ஸந்தோஷப்படுத்துவதைவிட அதிகமாகிய தர்மம் வேறொன்றுமில்லை. 'அந்நம் பரப்ரஹ்ம ஸ்வரூப' மென்று தேவதைகள் முனிவர்கள் முதலானவர்களும் எப்பொழுதும் ஸ்துதி செய்வார்கள். யஜ்ஞ யாகாதிகள் முதலாகிய உலக வ்யவஹாரங்களெல்லாம் அன்னத்தினாலேயே நடக்கின்றன. அன்னமில்லாவிடில் லோகதந்த்ரமெல்லாம் நசித்துவிடும். உலகத்திற்கெல்லாம் அன்னமே ப்ராணாதாரம். ஆதலால், தனக்கில்லையென்று சிந்தனை செய்யாமல் பசியாய்வந்த அதிதிகளை அவஶ்யமாய் ஆதரிக்கவேண்டும். தரித்ரர்கள், வ்ருத்தர்கள், தபஸ்விகள், குரூபிகள், வித்யாஹீனர்கள் முதலானவர்களை திரஸ்காரம் செய்வது பாபமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். பசியாய்வந்த அதிதிகளை ஆதரிக்காமல் புஜித்த அன்னம் ஆபோஸனம், மத்யபானத்திற்கு ஸமானமென்றும் கோமாம்ஸபக்ஷணைக்கு ஸமானமென்றும் சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. சுநகமா (நாயா) யினும் சண்டாளனாயினும் பசியாய்வந்தபோது நிராஹரிக்காமல் அன்னமிட்டு ஆதரிப்பது மஹாபுண்யமென்று தர்மசாஸ்த்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. பசியாய் வந்தவர்களின் குலகோத்ரங்களை விசாரிக்கவேண்டிய அவஶ்யமில்லை. அவர்களின் ஜடராக்நியைத் தணிக்கச்செய்து அனுப்புவதே முக்யமானது. ப்ரஹ்மதேவன் ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தபோது "அந்ந மம்ருதம்" என்று விதித்திருப்பதால் அன்னமில்லாவிடில் எப்படிப்பட்ட பலசாலியாயிருந்தபோதிலும் பலம் துர்ப்பலமாய்விடும். தாதுக்களின் அபிவ்ருத்தி நிமித்தமாய் ஜனங்களெல்லோரும் அன்னத்தையே இச்சிக்கின்றார்கள். பூர்வம் பாரதயுத்தத்தில் அர்ஜுனனுடைய பாணத்தினால் ஆயாசப்பட்ட கர்னன் ரதத்தின்மீது சாய்ந்

திருக்கும்போது க்ருஷ்ணமூர்த்தி அவனுடைய தர்மங்களை யெல்லாம் க்ரஹிக்க எண்ணினவராய் ப்ராஹ்மண வேஷத்துடன் அவனிடம்சென்று ஆசீர்வாதம்செய்தார். அப்படிப் பட்ட ஆபத்ஸமயத்திலுங்கூட கர்னன் ஸாந்தசித்தமுடையவனாய் அந்தக் கபட ப்ராஹ்மணனை நமஸ்கரித்து "தங்களுக்கு என்னவேண்டும்" என்று கேட்டான். அதற்கு அந்த ப்ராஹ்மணர் "நீசெய்த தர்மங்களையெல்லாம் தாரைவார்க்க வேண்டுமென்று" கேட்டனர். "தங்களிஷ்டம்போல் நான் செய்த தர்மங்களையெல்லாம் தாரைவார்க்கின்றேன். ஆனால் இப்போது எனக்கு மிகவும் தாஹமாயிருக்கிறது. ஆதலால் தாஹத்திற்கு ஜலம் கொண்டுவந்து தரவேண்டுமென்று" கர்னன் வேண்டிக்கொண்டான். அதன்பிறகு அந்தக்கபட ப்ராஹ்மணர் நல்லதென்று கர்னன்கையில் ஜலம் விட்டனர். விட்டவுடனே அது ஸ்வர்ணமாயிருக்க கர்னன் அதிசயப்பட்டு "ஸ்வாமீ தாங்கள் என் கையில் விட்ட ஜலம் எதனாலேயோ ஸ்வர்ணமயமாய்விட்டது. இதற்கென்செய்வேன்" என்று கேட்க, அதற்கு அந்த ப்ராஹ்மணர் "நீ செய்ததெல்லாம் ஸ்வர்ணதானமேயாதலால் நீ தொட்டதெல்லாம் ஸ்வர்ணமாகின்றன. இதுவரையில் நீ எப்பொழுதாகிலும் அன்னதானம்செய்ததில்லையா" என்றுகேட்டனர். அதைக்கேட்ட கர்னன் "நான் எப்பொழுதும் அன்னதானம் செய்ததில்லை. ஆனால் ஒருசமயம் ஓர் ப்ராஹ்மணன் வந்து என்னை அன்னம் கேட்டபோது, தர்மராஜா ப்ராஹ்மண சந்தர்ப்பணை செய்கின்றார் அவ்விடத்திற்குப் போவென்று என்விரலால் காட்டினேன்" என்று சொன்னான். அதன்பிறகு க்ருஷ்ணமூர்த்தி, "அன்னமிடாவிடினும் அன்னமிடும் இடத்தை விரலால் காட்டினபடியால் அன்ன தானபலன் உனக்குஉண்டாயிற்றென்றுசொல்லி நீகாட்டிய

விரலை வாயில்வைத்துச்சப்பினுல் தாஹம் தணியு''மென்று சொன்னுர். அவன் அதுபோல் செய்து தாஹம் தணிந்து, ஶாந்தசித்தனுய் தன் தர்மத்தை யெல்லாம் அந்த ப்ராஹ்மணனுக்குத் தாரைவார்த்து க்ருதார்த்தனுனன். ஆதலால், அன்னதானத்திற்குச் சமானம் எந்ததானங்களும் இல்லை. இது க்ருஹஸ்தர்கள் முக்யமாய் அனுஷ்டிக்க வேண்டிய தர்மம். தர்மராஜா ப்ராஹ்மணசந்தர்ப்பணை செய்ததாய் கர்னன் இதுவரையில் சொல்லியிருக்கிறுனல்லவா? அதன் விவரத்தை ஸ்ரீபகவத்கீதை அத்யாயம், 4-ஶ்-39-ல், சொல்லியிருக்கின்றோம். அதை இவ்விடம் சுருக்கமாய்ச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

"ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம் தத்பர ஸ்ஸம்யதேந்த்ரிய:
ஜ்ஞாநம் லப்த்வா பராம் ஶாந்தி மசிரேணுதி கச்சதி."

அர்ஜுநா! நான் இது வரையில் (அ-4,ஶ்-38-ல்)சொல்லியவைகளெல்லாம் சரியாய்த் தெரியவந்ததல்லவா;

அர்ஜுநன்—ஆம், சரியாய்த் தெரியவந்தது.

க்ருஷ்ணன்:—ஜ்ஞானமடைய ஆசையுடையவன் அதற்காக ஆஶ்ரயிக்கப்பட்ட ஸத்குருவிடத்தில் பக்தி ஶ்ரத்தையுடையவனுய், தத்தேகநிஷ்டனுய், இந்த்ரிய நிக்ரஹமுடையனுய் எவன் இருக்கின்றுனே, அப்படிப்பட்டவனுக்கே ஜ்ஞானம் சித்திக்குமேயொழிய இதரர்களுக்குச் சித்திக்கமாட்டாது. அப்படி ஜ்ஞானமடையும் வரையில் கஷ்டமேயொழிய, அடைந்தபிறகு ப்ரயாசையில்லாமலே சித்தஶாந்தி உண்டாகின்றது. இதற்கு த்ருஷ்டாந்தமாய் நமக்குஅனுபவமான விஷயம் ஒன்றுண்டு ; அதைச் சொல்லுகின்றேன் கேள். பூர்வத்தில் உன்னுடைய தமையனுன தர்மபுத்ரர் நாரதர் வசனத்தினுல், ராஜஸூயயாகம் செய்யும்பொழுது

ஓர் அற்புதமான விஷயம் ஒன்று நடந்தது. அது யா தெனில், ப்ரஹ்மசாரியும் கேவலவைராக்ய சீலனுமாகிய ஓர் ப்ராஹ்மணன் சத்குருவை ஆஶ்ரயித்து அவருடைய அனுக்ரஹத்தால் உபதேசம்பெற்றுத் தத்வாரா கடைத் தேறவேண்டுமென்று நிஶ்சயபுத்தியுடையவனாய் அந்தக் குருவை ஆஶ்ரயித்து அவருக்கு அதிக ஶ்ரத்தை பக்தி யுடன் ஶுஶ்ரூஷை செய்துகொண்டு அநேககாலம் காத்துக் கொண்டிருந்தான். ஒருநாள் குரு சிஷ்யர்களிருவரும் ஒரு கானகத்தின் வழியாய்ச் செல்லும்போது குருவிற்கு அக ஸ்மாத்தாய் அவஸான(மரண)காலம் நேர்ந்து மிகவும்தாஹ முடையவனாய் நடக்கச் சக்தியற்று ஓர் வ்ருக்ஷத்தினடியில் படுத்துக்கொண்டு தாஹத்திற்கு ஜலம் கொண்டுவரும்படி சிஷ்யனுக்கு ஆஜ்ஞாபித்தான். சிஷ்யன் சமீபத்தில் ஜல மில்லாததால் பஹுதூரம் போகவேண்டியதாய் நேர்ந்த தால் கொஞ்சம் தவக்கப்பட்டது. இதற்குள் இவ்விடத் தில் அந்தக் குருவிற்கு ப்ராண ப்ரயாணகாலம் சமீபித்து விட்டபடியால் ப்ராணனை விடும்போது தன் சிஷ்யனை நினைத்து அவன், தனக்கு இதுகாலமாய் பக்தி ஶ்ரத்தை யுடன் தன்னை ஆஶ்ரயித்தவனாயிருந்தவனாதலால், அவனை வ்யர்த்தப்படுத்தலாகாதென்று எண்ணினவனாய் அவனுக்கு உபதேசம் செய்ய நினைத்திருந்த வாக்யத்தைப் பூமியின் மீது விரலாலெழுதித் தன் சமீபமாய்க் கழுதைகளை மேய் த்துக்கொண்டிருந்த ஓர் தொம்பரச்சிக்குக் காட்டித் தன் சிஷ்யன் வந்தவுடனே அவனுக்கு இதைக்காட்ட வேண்டு மென்று சொல்லிவிட்டு ப்ராணனை விட்டுவிட்டான். அதன்பிறகு தொம்பரச்சி, தரையிலெழுதிய அவ்வெழுத்து காற்றினால் கலைந்துவிடுமென்று நினைத்தவளாய் அதை ஓர் முள்ளினால் ஓலையில் அந்த லிகிதத்தைப்போல்

எழுதிக்கொண்டு ஷை அக்ஷரங்களையெல்லாம் துடை த்துவிட்டு ஓலையைச் சுருளையாக்கித் தனது காதில் அணியா யிட்டுக்கொண்டாள். சிஷ்யன் ஜலங்கொண்டு வந்து மரணமடைந்த தன் குருவைப் பார்த்து மிகவும் துக்காக்ராந்தனாய்ச் சோகித்து, அதுவரையில் நடந்த வ்ருத்தாந்தங்களையெல்லாம் அந்தத் தொம்பரச்சியால் அறிந்தவனாய் அவளுடைய காதணியாயிருந்த அவ்வோலை யைக்கொடுக்கும்படி அதிக ஆத்ரத்துடன் அவளைக் கேட்டான். அப்படிப்பட்ட அவனது ஆத்ரத்தைப் பார்த்து அந்தத் தொம்பரச்சியானவள் அவனைச் சிலகாலம் தன்னிடத்தில் சேவை செய்விக்கவேண்டுமென்றுநினைத்து அவ்வோலையை அவனுக்குக் கொடாமல் காலத்தைக் கழித்துக்கொண்டுவந்தாள். அவனும் அவளது கழுதை களை மேய்த்துக்கொண்டுவந்தான். அவளது அனுக்ரஹத் தால் குருவாக்ய லிகிதமாகிய காதணியை அடையவேண்டு மென்று நினைத்துத் தன் குருவை எப்படி பக்தி ஶ்ரத்தை யுடன் ஆஶ்ரயித்துக்கொண்டிருந்தானோ அதுபோலவே அவளை ஆஶ்ரயித்து அவளிட்டவேலைகளையெல்லாம் செய் துகொண்டு தனக்குத்தீர்ந்தபோது க்ராமத்திற்குள்சென்று ப்ராஹ்மண அக்ராரத்தில் பிக்ஷவாங்கிப் புஜித்து, மற்றக் காலங்களெல்லாம் அவளையே ஆஶ்ரயித்துக்கொண்டு அவள் எங்கு சென்றபோதிலும் உடன்சென்று அவளைச் சேவித்துக்கொண்டு காதிலிருக்கும் ஓலையைக் குறியாகவே பார்த்துக்கொண்டு அவளுடன்கூடவே திரிந்துகொண்டி ருந்தான். இப்படியாய் அநேககாலம் சென்றபிறகு ஒருநாள், தொம்பரக்கூட்டமெல்லாம் தர்மபுத்ரர் செய்யும் ராஜஸூய யாகசாலைக்குச் சமீபத்தில் கூடாரம் போட்டு இறங்கினார்கள். அவ்விடத்தில் இந்த ப்ராஹ்மணன்

அந்தத் தொம்பரச்சி ஆஜ்ஞானுசாரமாய்க் கழுதைகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது க்ஷுத்பாதை (பசி) யினால் மிக வருந்தினவனாய் தத் சமீபத்திலிருக்கும் யாக சாலைச்சம்பந்தமாகிய மடப்பள்ளியிலிருந்து ப்ரவஹித்துக் கொண்டிருக்கும் சாதம்வடித்த கஞ்சிநீரில் நான்கு கை யெடுத்து உட்கொண்டான். அப்பொழுது யஜ்ஞ சாலையில் லக்ஷ ப்ராஹ்மண சந்தர்ப்பணைக்கு ஒருவிசை தனக்குத்தானாய் அடிக்க ஏற்படுத்திக் கட்டியிருக்கும் மாயாமணியானது ஓயாமல் அடிக்கமுயன்றது. அதைக் கேட்ட உனது தமையனாராகிய தர்மபுத்ரர் இத்தனைலக்ஷ ப்ராஹ்மணர்களுக்கு ஏககாலத்தில் எப்படி சந்தர்ப்பணை ஆயிற்றென்று ஆஸ்சர்யப்பட்டுக்கொண்டிருந்தார். நான் அதனுடைய நிஜஸ்திதி அறிந்தவனாதலால், அது விஷயத் தைக்குறித்து நிதானமாய் விசாரிக்கலாமென்று அவருக்கு அப்போது சமாதானம்சொல்லி, பிறகு அந்தத் தொம்ப ரச்சியைக் கழையின்மீது ஆடச்செய்து வேடிக்கை பார்க் கும்படி தர்மபுத்ரரை ப்ரேரேபணை செய்வித்தேன். அவரும் அப்படியே அந்த தொம்பரச்சியைக் கழையின்மீது ஆடும் படி உத்தரவுசெய்தார். அவளும் மிக உத்ஸாஹத்துடன் தன் சாமர்த்யங்களையெல்லாம் அந்தசபையாருக்குக்காட்டி ஆடிக்கொண்டிருக்கும் சமயத்தில், அவளுக்குப் பரிசளிப்ப தாகக் கொண்டுவந்த ரத்நமிழைத்த கம்மலை மேலே உயர் த்தி வீசுகிறோம், கழையின்மீது ஆடிக்கொண்டே அந்தக்கா தணியைக் கைகளால் பிடித்துக் காதில்போட்டுக்கொள்ள வேண்டுமென்று அவளுக்கு ஆஜ்ஞாபித்தார்கள். அவள் அதுபோலவே ஏந்திக்கொண்டு தன்காதில் அதுவரையில் தரித்திருந்த ஓலைக்கம்மலைக் கழற்றிக் கீழே எறிந்துவிட்டு அந்த ரத்நக்கம்மலைத் தரித்துக்கொண்டாள். ஓலைக்கம்மல்

கீழேவிழுந்தவுடனே அதற்காகக் காத்திருக்கும் ப்ராஹ்ம ணோத்தமன் எடுத்துக்கொண்டு போய்விட்டான். இந்தவிஷ யம் நான்தவிர மற்றெவரும் கவனித்தவர்களல்லர். அதன் பிறகு மறுநாள் உதயத்தில் நான் தர்மபுத்ரரை ஏதோ ஒருவிஷயமாய் என்னுடன்கூட அழைத்துக்கொண்டு பாதசாரியாய் சமீபத்திலிருக்கும் நதீதீரத்தில் கேளி விலாசமாய்த் திரிந்திருக்கும்போது, ப்ராஹ்மணன் தன் குரு உபதேசம்செய்த வாக்யம் எழுதப்பட்டிருந்த ஓலைக்கம்மலை அவிழ்த்துக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை நாங்களிருவரும் பார்த்து அவனரு கிற்சென்று எச்சரிக்கைசெய்து பார்த்தபோது அவன் நிர்ஜீவனாயிருந்தான். அதைப்பார்த்து உமது தமையனார் ஆஸ்சர்யப்பட்டுக்கொண்டிருக்க, அப்பொழுது நான் ப்ராஹ் மணனுடைய ஸவிஸ்தாரங்களையெல்லாம்சொல்லி, இந்த ப்ராஹ்மணனே நேற்றையதினம் யஜ்ஞசாலையின்சமீபத்தில் ஓடிக்கொண்டிருக்கும்கஞ்சியை நான்கு கை சாப்பிட்டான். அவன்சாப்பிட்ட கஞ்சியில் எத்தனை துளி பிந்துக்களிருந் தனவோ அத்தனை லக்ஷப்ராஹ்மணர்களுக்கு சந்தர்ப்பணை செய்ததற்குச் சமானமாயிற்று. அதனால் அந்த மாயா மணி ஓயாமல் அத்தனைவிசைகள் அடித்ததென்றும், அந்த ப்ராஹ்மணனுக்கு இப்படிப்பட்ட மஹாத்மியம் குருவினிட த்தில் உண்டாயிருந்த பக்தியினாலும், அந்தக் குருபதேச வாக்யம் லபிக்கச்செய்துகொள்ள அதிலுண்டாகிய ஸ்ரத் தையினாலும் உண்டாயிற்றென்றும், அப்படிப்பட்ட ஸ்ரத் தையினால் அவனுக்கு அந்த வாக்யம் லபித்தவுடனே அவனிடத்திலுள்ள ஆத்மா கிளம்பி பரமாத்மாவில் ஐக்ய மாயிற்றென்றும் தெரியச்சொன்னேன். அதன்பிறகு தர்மபுத்ரர் அந்தக் களேபரத்தைச் சமாதி செய்வித்து

அதற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்தார். ஆதலால், ஓ அர்ஜுனா! இதனால் என்ன ஏற்படுகின்றதென்றால், சிஷ்யனுக்கு குருவினிடத்தில் இருக்கவேண்டிய பக்தி இப்படிப்பட்டதென்றும், அந்த குரூபதேசத்தை அடைவதற்காக இருக்கவேண்டிய ஶ்ரத்தை இப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட ஶ்ரத்தையினால் உண்டாகும் நிஶ்சயஜ்ஞான மிப்படிப்பட்டதென்றும், அப்படிப்பட்ட ஜ்ஞானத்தினால் உண்டாகும் அவசானம் (மரணம்) இப்படிப்பட்டதென்றும் அறியக்கடவாய். இதற்குப் பின் விஷயங்களை கீதையில் விரிவாய்க்காணலாம். மற்றொரு த்ருஷ்டாந்தம் சொல்லுகின்றோம் கேளுங்கள்:—

பூர்வம் ஹிமவத்பர்வதத்திற்கு சமீபத்திலிருக்கும் ஓர் குக்ராமத்தில் ப்ராஹ்மண வைதவ்ய ஸ்திரீ ஒருத்தியிருந்தாள். இவள் ப்ரதிதினம் அக்ஷயபாத்ரத்திற்குச் சென்று அமுதுபடி கொண்டுவந்து அவைகளில் பாதி விற்பனை செய்து ஸாமக்ரியைகளை வாங்கிக்கொண்டு வந்து மற்றப்பாதி அமுதுபடி யெல்லாம் சமைத்து ப்ராஹ்மணர்களுக்குப் பிக்ஷை தந்து மிகுதியான ப்ரசாதத்தைத் தானும் தனது புத்ரனும் புஜிப்பது வழக்கம். இப்படி அநேகநாள் நடந்துகொண்டுவந்தன. ஒருநாள் குமாரன் தாயைப்பார்த்து அம்மா நீர் ப்ரதிதினம் பிக்ஷையெடுத்துக்கொண்டுவரும் அமுதுபடியில் சிறிதேனும் நிறுத்தாமல் எல்லாவற்றையும் சமைத்து ப்ராஹ்மணனுக்கு அன்னமிடுகின்றாயல்லவா? எப்பொழுதாகிலும் உனக்கு வ்யாதி ஸம்பவித்தால் அப்பொழுது வெளியில்சென்று அமுதுபடி கொண்டுவருவது மிகவும் கஷ்டமாயிருக்குமல்லவா? அப்பொழுது ப்ராஹ்மணனுக்கு பிக்ஷை எப்படிக்கொடுப்பீர், நாம் எப்

படிஜீவிப்பது ஆதலால், இன்றுமுதல் ப்ராஹ்மண பிக்ஷை நிறுத்தி மிகுதியாகும் அமுதுபடியைச்சேகரித்துக் கொண்டு வருவாயாக வென்று சொன்னன். அதைக் கேட்ட தாயானவள் புன்னகையுடன் (சிரித்து) அப்பா குமாரா! என்னகஷ்டம் வந்தபோதிலும் அக்ஷயபாத்ரமாகிலும் கொண்டுவந்து ப்ரதிதினம் ப்ராஹ்மணனுளுக்கு பிக்ஷை தந்து பிறகு நீங்கள் புஜிக்கவேண்டும். இப்படி புஜிப்பதனுல் விசேஷ புண்யமுண்டாகுமென்று உனது தகப்பனுர் சொல்லிவிட்டு ப்ராணனைவிட்டார். ஆதலால், அதுமுதல் இதுவரையில் நடந்துகொண்டுவருவதை நிறுத்திவிட வேண்டுமென்று நீ சொல்வது சரியான வார்த்தையன்று. நாம் செய்யும் சத்கர்மங்களையெல்லாம் ஈஶ்வரார்ப்பணமாய் பரிசுத்தமனசுடன் செய்துவந்தால் நமக்கு யாதொருபிணியும் வரமாட்டாது. ஹ்ருதயத்தில் காமக்ரோதாதி மலினமுடையவர்களுக்கே வ்யாதி ஸம்பவிக்குமே யல்லாமல் நமக்கு எப்பொழுதும் சம்பவிக்கமாட்டாது. ஆதலால், நீ இப்படிப்பட்ட க்ரோத மனமுடையவனுய் எப்பொழுதும் இராதே என்று தாயானவள் உபதேசித்தாள். இவைகளை யெல்லாம் கேட்ட குமாரன் தாயை நோக்கி அம்மா நீர் சொல்லியவார்த்தைகளெல்லாம் சரியானவைகளே. நான் க்ரோதமனஸுடன் கேட்டவனல்லன். பஞ்சபூதங்களினுல் உண்டாகிய மானிட சரீரம் எப்பொழுது வந்ததோ அப்பொழுதே சுகதுக்கங்களும் வ்யாதிகளும் வருவது ஸ்வபாவமல்லவா? அதனுல், யான் அவ்வாறு கேட்க நேரிட்டது. ஆனுல், அம்மா நீர் இப்பொழுது செய்துகொண்டு வரும் அன்னதானத்தினுல் என்னபலன் உண்டாகுமோ அதைச் சொல்லக்கடவீர் என்று குமாரன் கேட்டான். இதைக்கேட்ட தாயானவள் அப்பா குமாரா! இதன்பலன்

எனக்குத் தெரியவரமாட்டாது. வனத்தில் வசிக்கும் யோகீஸ்வரர்களுக்கும் முனிவர்களுக்குமே இதன்மூலம் விவரமாய்த் தெரியவருமேயல்லாமல் க்ராமத்திலிருக்கும் என்னைப்போன்ற பாமரஜனங்களுக்குத் தெரியவரமாட்டா தென்று தாய் சொன்னாள். இதைக்கேட்ட குமாரன், ஆனால் அம்மா நான் கானகத்திற்குச் சென்று மஹான் களைக் கண்டு தரிசித்து அன்னதான பலனைத் தெரிந்து கொண்டு வருகின்றேன். ஆதலால், கானகம் செல்ல விடை கொடுக்கக்கடவீர் என்று கேட்டான். இதைக் கேட்ட தாயானவள் அப்பா குமாரா! நீயோ மிகவும் சிறிய வன், அன்னபானாதிக ளில்லாமல் கானகம் சென்று மஹா ன்களைக்கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டசாத்யமாயிருக்கும். ஆதலால், நீ செல்லவேண்டாமென்றுசொன்னாள். அதைக் கேட்ட குமாரன், இல்லையில்லை, எப்படியாகிலும் கஷ் டத்துடன் சென்று மஹான்களைத் தரிசித்து இதன் மூலத்தைத் தெரிந்துகொண்டு வருவேனே யல்லாமல் சும்மா வரமாட்டேன். ஆதலால், தடைசொல்லாமல் விடை கொடுத்தனுப்பக்கடவீர் என்று தாயினிடம் விடை பெற் றுக்கொண்டுசென்று க்ஷுத்பாதை யுண்டான போதெல் லாம் ஆங்காங்குக் காணப்படும் குக்ராமங்களில் பிக்ஷை யுண்டுகொண்டே கானகம்சென்றான். இப்படி நடுகாட்டில் செல்லும்போது அஸ்தமிக்கும் ஸமயமாயிற்று. அப்போது தான்செல்லும் மார்க்கத்தில் ஓர் வேடனும் வேடச்சியும் தமக்கு வேண்டிய தேன் தினை கிழங்குமுதலாகிய ஆஹாரங்களைப் பகலெல்லாம் சம்பாதித்துக்கொண்டு வேண்டிய அளவு புஜித்து இராக்காலங்களில் ம்ருகபாதை களுக்குப் பயந்து, பூமிக்குமேல் பத்து அடி உயரத்தில் ஓர் பர்னசாலையை நியமித்துக்கொண்டு அதன்மேல் இருவரு

மாய் ஸயனிப்பது வழக்கம். அந்தப் பர்னசாலைக்கு ஸமீபமாய்ச்செல்லும் ப்ராஹ்மணச் சிறுவனை அந்தவேடன் கண்டான். அவனைக்கண்டவுடன் வேடனது சரீரமானது நடுநடுங்கி ஐயையோ! இந்தச்சிறுவன் இக்கானகத்திலுள்ள ம்ருகங்களுக்கெல்லாம் தப்பித்துக்கொண்டு இவ்வளவு தூரம் எப்படி உயிர்பிழைத்து வந்துவிட்டானென்று மனவருத்தமுடையவனாய் அதிக ஆத்ரத்துடன் ப்ராஹ்மணச் சிறுவனைப் பார்த்து "அப்பா குழந்தாய்! மஹா பயங்கரமாகிய இப்பெருங்காட்டில் இருக்கப்பட்ட ம்ருகங்களுக்குத் தப்பித்துக்கொண்டு இவ்வளவுதூரம் எப்படி உயிர்தப்பிப் பிழைத்துவந்தாய். நில்லுநில்லு இனிச்செல்ல வேண்டாம். அருணனும் தன் வீடு செல்லப்போகின்றான். அதனால் இருள் சூழ்ந்துகொள்ளப்போகின்றது" என்று ப்ரயாணத்தை நிறுத்தித் தனக்கும் தனது பார்யைக்கும் தயார் செய்துவைத்த தேன் தினைமாவுண்டையையும் அக்நியினால் சுட்ட காட்டுக்கிழங்குகளையும் மூன்றுபாகமாய்வைத்தான். இம்மூன்று பாகத்தையும் வேடச்சியானவள் கண்டவுடன், அதிக கோபங்கொண்டு, அடாபாபீ மூன்றுபங்கு ஏன் வைத்தாய் என் பங்கில் அந்தப்பையனுக்குக் கொஞ்சங்கூடக் கொடுக்கமாட்டேன். இரண்டாய்ப் பங்கிட்டு என் பங்கை எனக்குக் கொடுத்துவிட்டு உன்பங்கில் அவனுக்குக்கொடுத்துக்கொள் என்று கடுகடுத்தாள்.

அதனால் வேடன் பயந்து இரண்டாய்ப் பங்கிட்டு ஒரு பாகம் பார்யைக்கும் மற்றொருபாகம் ப்ராஹ்மணச் சிறுவனுக்கும் கொடுத்துவிட்டுத்தான்மூன்றுகைஜலம்சாப்பிட்டு உபவாசியாயிருந்தான். ப்ராஹ்மணச்சிறுவன் தேனுடன் கலந்த தினைமாவுண்டையையும், அக்நியினால்சுட்ட காட்டுக்கிழங்குகளையும் புஜித்துப் பசியைத்தணித்தான். சற்று

நேரத்திற்குள் இருள்சூழ்ந்துகொண்டது. வேடச்சி பர்ன சாலையேறி சயனித்துக்கொண்டாள். சிலநேரம் சென்ற பிறகு ப்ராஹ்மணச்சிறுவனும் வேடனும் பர்னசாலையின் மீதேறி பார்யைக்கும் தனக்கும் மத்தியில் சிறுவனைப் படுக்கவைத்தான். தன்புறமாய்ப் படுத்திருப்பது யார் என்பதை அறியவேண்டுமென்று வேடச்சி நினைத்துத் திரும்பித் தன் கையால் தடவிப்பார்த்து ப்ராஹ்மணச் சிறுவனென்று அறிந்து இவன் என்பக்கம் படுக்கக்கூடாது, எனக்குப் பாதியிடத்தைக் கொடுத்துவிட்டு மற்றப்பாதியில் நீங்கள் படுத்துக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தினாள். பின் வேடனானவன் பாதியிடம் அவளுக்குக்கொடுத்துவிட்டு மற்றப்பாதியிடத்தில் தான் பார்யையின் பக்கம் சயனித்துக்கொண்டு சிறுவனைப் பர்னசாலையின் ஓரமாய்ப்போட்டுத் தூக்கத்தில் கீழேவீழ்ந்துவிடாமல் தன்கையால் சிறுவனைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு தான் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தான். பிறகு பார்யை நல்ல நித்ரைசெய்யும் போது சிறுவனை மத்தியில் போட்டுத்தான் பர்னசாலையின் ஓரமாய்ப் படுத்து நித்திரை செய்தான். இப்படி நித்திரை செய்யும்போது அர்த்தராத்திரியில் வேடச்சி விழித்துக் கொண்டு சிறுவனைக் கீழே தள்ளிவிடவேண்டுமென்று எண்ணங்கொண்டவளாய்த் தனது ஸமீபத்திலிருப்பவன் தனது நாயகனென்று எண்ணிச் சிறுவனை மெதுவாய் நெட்டித்தள்ளினாள். தள்ளினவுடனே நல்ல தூக்கத்திலிருந்த வேடன் தொப்பென்று கீழே விழுந்தான். விழுந்த சப்தத்தை இவள் காதில்கேட்டவுடனே பீடை ஒழிந்ததென்று எண்ணிக்கொண்டாள். இவன் விழுந்தவுடனே அடியில் காத்துக்கொண்டிருந்த ம்ருகங்கள் அவனை வாயில்போட்டுக்கொண்டன. பிறகு அருணோதயமானவுடன்

கணவனைக்காணுமல் சிறுவனைக்கண்டு மனம்வாடி என் புறமாய் என் கணவன் படுத்திருந்தானே இவன் எப்படி என்புறமாய் வந்தானென்று தனக்குள் தான் சிந்தித்துக்கொண்டு இனியென்செய்வோம், என்புருஷனுக்குப் பதிலாய் இவனையே புருஷனுக வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்டு என்புருஷனை நீ கீழே தள்ளிப் புலிக்கு இரையாக்கினுய். ஆதலால், நான் உன்னை விடமாட்டேன் என்புருஷனுக்குப் பதிலாய் நீயேஎனக்குப் புருஷனு யிருக்கவேண்டுமென்று மடியில் கையைப் போட்டுக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். ப்ராஹ்மணச்சிறுவன் பயந்து நடுநடுங்கி ஐயையோ பர்ணசாலையோரமாய்ப் படுத்திருந்த நான் விழாமல் மத்தியில் படுத்திருந்தவேடன் விழுந்ததுமஹா ஆஶ்சர்யமாயிருக்கின்றது. இதுவிஷயம் உனக்கும் தெரிந்ததேயல்லவா? இது ஈஶ்வர ஸங்கல்பமேயல்லாமல் என்னுடையதல்லவென்று அநேக ந்யாயங்களைச் சொல்லியபோதிலும் அவள் கேட்கவில்லை. ப்ராஹ்மணச்சிறுவன் கடைசியாய் ஓர் எண்ணங்கொண்டு அவளிடம் பின்வருமாறு சொல்லுகின்றுன்.

ஓ வேடச்சியே உன்புருஷனை நான் கொன்றுவிட்டேனென்றும் அவனுக்குப் பதிலாய் என்னைப்புருஷனுக இருக்கும்படியல்லவா சொல்லுகின்றுய். நாம் இருவரும் இக்கானகத்தைக் கடந்து வெளியில் சென்று சுற்றுப் பக்கங்களின் க்ராமத்திலுள்ள பெரியமனிதர்களிடம் சென்று நம்முடைய ந்யாயத்தைச் சொல்லிக்கொள்வோம். அதற்கு அவர்கள் எப்படிச்சொல்லுகின்றுர்களோ அதுபோல் நடந்துகொள்ளலாமென்று சொன்னுன். வேடச்சி அதற்குச் சம்மதித்துக் காட்டைவிட்டு வெளியில்வந்து

தங்கள் கண்ணுக்குத் தென்பட்ட ஓர் க்ராமத்திற்குச் சென்று அவ்விடத்திலுள்ள மனிதர்களுக்கு நடந்த வ்ருத்தாந்தங்களையெல்லாம் சிறுவன் ஸவிஸ்தாரமாய்ச் சொன்னான். இவைகளையெல்லாம் கேட்ட க்ராமஸ்தர்கள் வேடச்சியின்மீது அதிககோபங்கொண்டு அவன் மடியை விடுவித்து நன்றாய் அடித்துத் துரத்திவிட்டார்கள். ப்ராஹ்மணச்சிறுவன் அதைத்தப்பித்துக்கொண்டு மறுபடியும் கானகத்தின்வழியாய் நடந்து க்ஷுத்பாதையுண்டானபோதெல்லாம் இலைகளைப்பறித்துத் தின்றுகொண்டே கானகத்தின் மத்தியில் சென்றான். இப்படிச்சென்றபோது ஓரிடத்தில் அழகாகிய ஓர்தடாகமும் அதற்குச் சமீபமாய் அழகிய பர்னசாலையும் இருப்பதைக் கண்டான். அதைக் கண்டவுடனே மிகவும் ஸந்தோஷமுடையவனாய் அதிசீக்ரம் பர்னசாலையைச் சேர்ந்தான். அந்தப்பர்னசாலைக்குள் தர்ப்பாஸனமும் புலித்தோலும் காஷாயவஸ்த்ரமும், இரண்டங்குல உயரமுள்ள ஓர் பெரிய பீடத்தின்மீதுபோட்டு அதன்மீது ஓர் பெரிய மஹரிஷியானவர் பத்மாசனத்தில் "சின்முத்ரை" யுடன் சமாதியில் இருக்கக்கண்டான். அவரைக்கண்டவுடன் தான் இரண்டுகைகளையுங்குவித்துக் கொண்டு அஞ்சலியஸ்தனாய் ஓர்புறம் நின்று ரிஷியை நகசிகபர்யந்தம் பார்த்துக்கொண்டிருந்தான். இப்படி காலைமுதல் மாலைவரையில் நின்றிருந்தும் ரிஷியானவர் கண்களைத்திறவாமல் ஸமாதிநிஷ்டையிலேயே யிருந்தார். இவனுக்கு க்ஷுத்பாதை அதிகமாயுண்டாயிற்று. உடனே

---

இந்த † 'சின்முத்ரை' யின் விபரங்களை மூன்றும் பதிப்பு "ஜீவப்ரஹ்மைக்ய வேதாந்தரஹஸ்யம்" இதில் விவரமாய்க் காணலாம்.

வெளியில்வந்து 'அவ்விடமிருந்த சில இலைதினுசுகளைத் தின்று ஜலத்தைப் பானம்செய்து பசியைத்தணித்து சீக்ரமாய் ஆஸ்ரமத்திற்குள்சென்று முன்போல் அஞ்சலியஸ்தனாய் நின்று இரவெல்லாம் விழித்திருந்தும் ஸமாதி கலையவில்லை. இவ்வாறே பத்துதினங்கள் கழிந்தன. பதினோராம் நாள் ரிஷியானவர் நிஷ்டைகலைந்து கண்களைத் திறந்து பார்த்தார். அப்போது சிறுவன் ஸாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று இருகைகளையும் குவித்து ஸிரஸின்மீது வைத்துக்கொண்டு "ஓ முநீஸ்வரரே! ப்ரபஞ்சத்திற்கெல்லாம் அதீதப்பட்டவஸ்து பரப்ரஹ்மமென்று சொல்லுகின்றார்களல்லவா? அந்த பரப்ரஹ்மத்திற்கோ ஸரீரமில்லை: ஆதலால், அது ஒருவருடனும் பேசாதது: இந்தபரப்ரஹ்மமே ஸகல ஜீவஜந்துக்களிலும் ஆத்மஸ்வரூபமாய் வ்யாபித்திருக்கின்றது. அஃதெப்படியென்றால், இரும்பை உலைக்களத்தில் வைத்து சிவக்கக்காய்ச்சி சம்மட்டியால் அடித்தபோது அதிலிருந்து எகிறிப்போவன அணுக்களல்லவா? அதுபோலவே ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி காலத்தில் அந்தப் பரப்ரஹ்மத்திலிருந்து அணுஸ்வரூபமாய் புறப்பட்டு பிபீலிகாதி ப்ரஹ்மபர்யந்தம்வரையில் சகல ஜீவஜந்துக்களிலும் சாக்ஷியாய் நிறைந்திருக்கும் வஸ்துவே ஆத்மாவென்று உபநிஷத்துக்கள் முறையிடுகின்றன. இப்படிப்பட்ட ஆத்மாவை மாயையென்னும் ஓர்வஸ்து மூடிக்கொண்டிருப்பதால் அது, தன் நிஜஸ்வரூபத்தை மறந்து மதிமயங்கி காமக்ரோத லோபமோஹ மத மத்ஸரங்களினாலும் ஈஷண த்ரயங்களினாலும் பந்தப்பட்டு அனேக ஜன்மங்களை எடுக்கின்றது. தங்களைப்போன்ற மஹான்களின் ஹ்ருதயத்திலிருக்கப்பட்ட ஆத்மாவை மாயை

அதாவது காமக்ரோதாதிகளும் ஈஷணத்ரயங்களும் பற்றுமல் ஸ்வயம்ப்ரகாசமாய் ப்ரகாஸித்துக்கொண்டிருப்பதால் தாங்களே ப்ரத்யக்ஷ பரப்ரஹ்மமென்று சொல்லப்படும். தங்களைப்போன்றவர்களுக்கு த்ரிலோகத்திலும் நடக்கும் விஷயங்களெல்லாம் ப்ரத்யக்ஷமாய்ச் சொல்ல சக்தியுண்டு. அஃதெப்படியென்றால், ஓர் குடத்திலுள்ள க்ஷீரத்தை (பாலை) ஏரிஜலத்துடன் கலந்தபோது அந்த க்ஷீரமானது ஏரியிலுள்ள ஜலத்திலெங்கும் வ்யாபித்து ஏரியிலுள்ள சகல வஸ்துக்களையெல்லாம் க்ஷீரம் எப்படி அறிகின்றதோ அதுபோலவே, தேவரீருடைய ஆத்மா மாயாந்தகாரத்தினல் மூடப்படாமல் பரிசுத்தமாய் ப்ரகாசித்துக்கொண்டு பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை அடைந்திருப்பதனல் "உலகத்திலுள்ள வஸ்துக்களையெல்லாம் பரப்ரஹ்மம் எப்படி அறிகின்றதோ" அதுபோலவே தேவரீருடைய ஆத்மாவும் ப்ரபஞ்சத்திலுள்ள சகலவஸ்துக்களையும் அறியும். ஆத்மா, பரப்ரஹ்மம் என்று நாமபேதங்களேயொழிய இரண்டுவஸ்துக்களின் குணமாத்ரம் ஒன்றே. ஆதலால், அடியேன் கோரிவந்த விஷயங்களை க்ஷணத்திற்குள் யோகத்ருஷ்டியில் அறியும்தன்மையுடைய தபோதனராய் இருக்கின்றீர்கள். அஃதெப்படியென்றால், தேவரீர் கண்களைமூடி ஆகாசவடிவமாய் (வெட்டவெளியாய்) நின்றபோது அந்தவெட்டவெளியில் ப்ரபஞ்சத்தில் நடக்கும் சகலவிஷயங்களும் தேவரீருக்குத்தெரியவரலாம். அப்படித்தெரிந்துகொள்ளும் சக்தியுடையவராயிருந்தபோதிலும் தேவரீருக்குக்கஷ்டம் கொடாமல் அடியேனுடைய வ்ருத்தாந்தங்களை யெல்லாம் சொல்லுகிறேன். ஆதலால், அடியேன்மீது க்ருபாகடாக்ஷம்வைத்து யோகத்ருஷ்டியில்

பார்த்து அவைகளை விவரித்துச் சொல்லவேண்டுமென்று பின்வருமாறு சொல்லப்போகின்றான்.

“ஓ தபோதனரே! சொல்லுகின்றேன் கேளுங்கள். எனது தாயானவள் மிகவும் ஏழை விதவை ப்ராஹ்மணஸ்த்ரீ. அவள் ப்ரதிதினம் பிக்ஷையெடுத்துக்கொண்டுவரும் அமுது படியில் பாதிவிக்ரயம்செய்து அதற்குத்தகுந்த ஸாமக்ரியை களைக்கொண்டுவந்து மிகுதியாகிய பாதி அமுதுபடியையெ ல்லாம் நாளைக்குவேண்டுமேயென்று சிறிதாகிலும் வையா மல் எல்லாவற்றையும் சமைத்து ப்ராஹ்மணளுக்கு பிக்ஷ தந்து மிகுதியாகிய ப்ரசாதத்தை என் தாயும் நானும் புஜித் துக்கொண்டுவருவது வழக்கம். இப்படி பிக்ஷையெடுத்து அன்னதானம்செய்வதனால் என்னபலன்உண்டாகின்றதோ அதைத் தெரிந்துகொள்ளவேண்டியவனாய் தேவரீரிடம் வந்திருக்கின்றேன். ஆதலால், தேவரீர் அடியேன்மீது க்ருபாகடாக்ஷம்வைத்து அனுக்ரஹிக்கவேண்டும்” என்று ஈனஸ்வரத்துடன்கேட்டு ஸாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ் கரித்து எழுந்துநின்று இருகைகளையும் குவித்துக்கொண்டு ஓர்புறமாய் நின்றுகொண்டிருந்தான். இவைகளையெல் லாம்கேட்ட முனியானவர் அதிக ஆஸ்சர்யமடைந்து ஆஹா! இவனோ மிகவும் சிறுபாலன், இவனுக்கு இப்படிப்பட்ட ஜ்ஞானம் ஜன்மாந்தரங்களில் செய்துவந்த புண்யவிசேஷத் தினால் உண்டாயிற்றென்று அறிந்து மிகவும் ஸந்தோஷித்த வராய் அவனைப்பார்த்துச் சொல்லுகின்றார். “அப்பா குழந்தாய் நீயோமிகவும்சிறியவன், நீ ஜன்மாந்தரங்களில் செய்துகொண்டுவந்த ஸஞ்சிதகர்ம ஸேஷத்தினால் ஏழை ப்ராஹ்மணவீட்டில் ஜன்மித்தாய். இப்போது மோக்ஷ வீட்டை அடைய அதிஸமீபத்தில் வந்திருக்கின்றாய்.

இன்னும் இரண்டுஜென்மத்தில் பரப்ரஹ்மஸ்வரூபத்தை அடைவாய் என்று சொல்லிக் கண்களைமூடிச் சற்றுநேரம் நிஷ்டையிலிருந்து சிறுவன் கேட்ட கேள்விகளையெல்லாம் யோகத்ருஷ்டியில் தெரிந்துகொண்டு கண்களைத்திறந்து சிறுவனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

"அப்பாகுழந்தாய்! காசிதேசத்தை ஆளப்பட்ட ராஜனுக்குப் பத்துமாதத்திற்குள் ஒருநாளைக் குறிப்பிட்டு அன்னாள் மாலை ஐந்துமணிக்கு ஸிம்ஹலக்நத்தில் ஓர்திவ்யமாகிய ஆண்குழந்தை பிறக்கப்போகின்றது. அக்குழந்தை ஜனிக்கும்போதே கீழேவிழாமலும் கைகளால்தீண்டாமலும் தங்கத்தட்டிலேந்திக்கொண்டு வரும்படியாய் அந்த ராஜனுக்குச்சொல்லினால் அவன் மிகவும் ஸந்தோஷப்பட்டு உன்னிஷ்டம்போல் செய்வான். அப்போது அக்குழந்தையைக்கேட்டால் நீ கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லு" மென்றுசொன்னார். அதைக்கேட்ட சிறுவன் மிகவும் ஸந்தோஷமடைந்து தபோதனரை ஸ்துதிசெய்து அவரிடம் ப்ரஹ்மோபதேசம் பெற்றுக்கொண்டு காசிநகரம் சென்றான். செல்லும்போது வழியில், விசேஷமாய்ப் புல்லும் கணுக்கால்ஜலமும் இருக்கப்பட்ட ஓரிடத்தில் ஒரு பசுவானது நின்றுகொண்டு தலையைக்குனிந்து புல்லைத் தின்று ஜலத்தைக்குடிக்க ஶக்தியற்றதாய் தலையைநிமிர்ந்துகொண்டு பசியினால் வருந்திக்கொண்டே அநேகதினங்களாய் நின்றுகொண்டிருந்தது. அப்பசு இருக்கும்படியான மார்க்கமோ மனிதஸஞ்சாரமில்லாத மார்க்கம். அம்மார்க்கமாய் இந்த ப்ராஹ்மணச்சிறுவன் போவதை பசுவானதுகண்டு அவனைப்பார்த்துக் கூப்பிட்டு அழுதுகொண்டே நீ எங்கேபோகின்றாய் என்றுகேட்டது. அவன்

ம்ருகபாஷைகளும் ஊர்வன (நகரும்) ப்ராணிகளின்பாஷை களும், பக்ஷிகளின்பாஷைகளும் நன்றாய் அறிந்தவனாதலால், பசு கேட்டவுடன் நான் அன்னதானபலனைக் கேட்கப்போ கின்றேனென்று சொன்னான். அதைக்கேட்ட பசுவானது அப்பா பாலா! யதேஷ்டையாய்ப் புல்லும் ஜலமும் இருக்கும் படியான இடத்தில் நான் இருந்தும் புல்லை மேயலாமென்று எண்ணித் தலையைக் குனியப்போனால் குனியாமல் நிமிர்ந்த வாறேயிருக்கின்றது ; பூர்வஜன்மத்தில் நான் என்ன கர்மம்செய்தேனோ தெரியவில்லை ; தலையைக்குனிந்து இரை எடுக்க ஶக்தியில்லாமலிருக்கும் காரணம் என்ன மோ அதையும் மறவாமல் விசாரித்து வருகின்றாயா வென்றுகேட்டது. அதைக்கேட்ட ப்ராஹ்மணச்சிறுவன் நல்லதென்று சம்மதித்துச்சென்றான். செல்லும்போது மற்றோரிடத்தில் ஓர்பெரிய 'மா' வ்ருக்ஷமிருந்தது.

அந்த வ்ருக்ஷம் வருஷாந்தரத்தில் அநேக நல்ல கனி களைத்தருவதுண்டு. அக்கனிகளைப் பக்ஷிகளும் மனிதர் களும் புஜிக்காமல் கீழேவிழுந்து நாசமாவதும்தவிர அதன் நிழலில் ஒருவரும்போய் உட்காருவது மில்லை. இஃதன் றியும், எந்தப் பக்ஷிகளும் அந்த மரத்தின்மீது வந்து உட் காருவது மில்லை. அந்த வ்ருக்ஷமிருக்கும் மார்க்கமாய் ப்ராஹ்மணச்சிறுவன் சென்றுகொண்டிருப்பதை மா வ்ரு க்ஷமானதுகண்டு, ஓ பிள்ளாய் எங்கு செல்லுகின்றாய் நில் நில் இப்படி வாருமென்று கூப்பிட்டது. அதைக்கேட்ட சிறுவன் மா வ்ருக்ஷத்தின் ஸமீபத்தில் வந்து நின்றான். மாவ்ருக்ஷம் அவனைப்பார்த்து நீயெங்கு செல்லுகின்றா யென்றுகேட்டது. அன்னதானபலனைக் கேட்கப்போகின் றேனென்று சொன்னான். அதைக்கேட்ட மா வ்ருக்ஷமா

னது அப்பா நான் வருஷாந்தரந்தோறும் அநேக கனி களைத்தருகின்றேன், அக்கனிகளைப் பக்ஷிகளும் மனிதர் களும் புஜிக்காமல் பழுத்துக் கீழேவிழுந்து நாசமாவதும் தவிர என் நிழலில் எவர்களும்வந்து நிற்பதுமில்லை, எந்த பக்ஷிகளும் உட்காருவதுமில்லை; அது என்ன காரணமோ அதையும் தெரிந்துகொண்டு வருகின்றாயா என்று கேட் டது. நல்லதென்று சம்மதித்துச்சென்றான். இப்படிச் செல்லும்போது மற்றோரிடத்தில் ஒரு ஸர்ப்பம் புற்றுக்குள் பாதியுடலும் புற்றுக்குமேல் ஸிரசுடன் பாதியுடலும் வைத் துக்கொண்டு வெளியில்வந்து இரையெடுப்பதற்கும், புற் றுக்குள் செல்வதற்கும் ஶக்தியில்லாமல் அநேகநாளாய் க்ஷுத் பாதையுடன் அவஸ்தைபட்டுக்கொண்டிருந்தது. இப்படிப்பட்ட சமயத்தில் ஷ ப்ராஹ்மணச்சிறுவன் அம் மார்க்கமாய்ச் சென்றுகொண்டிருப்பதை ஸர்ப்பம் கண்டு ஓ ஐயா! இப்படிவாரும் என்று கூப்பிட்டது. அதைக்கேட்ட சிறுவன் புற்றுக்குச் சமீபமாய்ச்சென்று நின்றான். அந்த ஸர்ப்பமானது அவனைப்பார்த்து ஐயா! இப்பொழுது நீர் எங்குசெல்லுகின்றீர் என்றுகேட்டது. அதற்கு அந்தச் சிறுவன் நான்அன்னதானபலனைக் கேட்கப்போகின்றேன் என்றுசொன்னான். அதைக்கேட்ட ஸர்ப்பமானது, ஐயா நான் நெடுநாளாய் இந்தப்புற்றுக்கு மத்தியில் நின்று கொண்டு, பாதியுடல் புற்றுக்குமேலும் பாதியுடல் புற்றுக் குள்ளுமாயிருக்கின்றேன். வெளியில் சென்று இரையெடுக் கவேண்டுமென்றாலும்போகக்கூடவில்லை, புற்றுக்குள்போக லாமென்று நினைத்தபோதிலும் போகக்கூடவில்லை. ப்ரா ணன்போய்விட்டாலும் சுகமாயிருக்கும்; அப்படியும் போக வில்லை. எதனால் இப்படி அவஸ்தைபட்டுக்கொண்டிருக்

கின்றேனே அதையும் தெரிந்துகொண்டு வரவேண்டு மென்று மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டது. சிறு வன் அதற்குச் சம்மதித்துச் சென்றான். இப்படியாய்ச் செல்லும்போது வழியில் ஓர் நகரத்தைக்கண்டு, ராஜ வீதிமார்க்கமாய்ச்சென்றான். வெகுதூரம் நடந்து வந்த ஆயாஸத்தினால் ஶ்ரமைதீர்த்துக்கொள்வதற்காக அவ்வீதி யில் ஓர் பெரிய தாசிவீட்டுமாளிகையின் தெருத்திண்ணை யின்மேல் போய் உட்கார்ந்தான். இவன் உட்கார்ந்திருப் பதை தாசியின் தாதிகள் கண்டு தன் எஜமானிக்குப்போய்ச் சொன்னார்கள். அதைக்கேட்ட தாசியானவள் வெளியில் வந்து பார்த்து யாரையா நீர் வெகுதூரம் நடந்து ஆயா ஸமாய் வந்திருப்பதாய்க் காணப்படுகின்றது, உமக்கு என் னவேண்டும், நீர் எங்குசெல்லுகின்றீர் என்றுகேட்டாள். இதைக்கேட்ட சிறுவன் அம்மா நான் காட்டுக்குச்சென்று பெரியோர்களைத் தர்சித்து அன்னதான பலத்தைக் கேட்கச்செல்லுகின்றேனென்று சொன்னான். இதைக் கேட்ட தாசியானவள் சிறுவனை உள்ளே அழைத்துக் கொண்டுபோய், தக்க ஆஸனத்தின்மீது உட்காரவைத்து ஆயாஸம் தீருவதற்காகப் பழமும் பாலும் தந்து அன்றுமு ழுவதும் அவ்விடம் இளைப்பாறச்செய்து ராத்ரி நல்ல இலவம்பஞ்சு மெத்தையின்மீது ஸயனிக்கச்செய்தாள். மறுநாள்காலை ப்ராஹ்மணச்சிறுவன் தாசியினிடம்சென்று அம்மா நான்போய்வருகிறேனென்று கேட்டான். அப் பொழுது தாசியானவள் அவனை ஓர் ஆஸனத்தில் உட்கா ரச்செய்து பின்வருமாறு சொல்லுகின்றாள்.

“ஐயா! நானோ தாசித்தொழில் செய்பவள், ப்ரதிதினம் வரப்பட்டவர்களிடம் ஆயிரம்பூவராகன்கள் வாங்குவது

வழக்கம், அன்று செலவுக்குவேண்டிய தொகையை எடுத்துக்கொண்டு மிகுதியாகிய தொகையைப் பெட்டியில் வைத்துப் பூட்டி மறுநாள் காலையில் எழுந்து பார்க்கும்போது, அதில் யாதொன்றுமில்லாமல் வெறும் பெட்டியாயிருக்கும். நான் புஷ்பவதியானநாள்முதல் இதுவரையில் இப்படியே நடந்துகொண்டுவருகின்றது. இது என்னகாரணமோ அறியேன் ஆதலால், இதையும் தெரிந்துகொண்டு வரவேண்டுமென்று" சொன்னாள். இதையெல்லாம் கேட்டசிறுவன் அப்படியே ஆகட்டுமென்று சொல்லி சென்றான். பிறகு வழிநடந்து செல்லும்போது வழியில் ஓர் ஏரி உண்டு. அந்த ஏரி, அவ்வூருக்குச்சமீபத்திலிருக்கும் ஓர் ஸ்ரோத்ரியதாரனால் கட்டப்பட்டது. அந்த ஏரிக்கு மேற்புறமாய் ஓர் கால்வாயுண்டு. அதன்மூலமாய் அந்த ஏரிக்கு ஜலம்வந்து விழுவதுண்டு. அரையேரிஜலம் வந்தவுடன் இரவில் ஓர்புறமாய் கரை அறுபட்டு ஜலமெல்லாம் ஓடிப்போவது வழக்கம். காலையில் ஏரிக்குடையவன் வந்துபார்த்தபோது ஏரி அறுபட்டு ஜலமெல்லாம் ஓடிவிட்டதைக்கண்டு சிந்தாக்ராந்தனாய் மறுபடியும் கூலியாட்களைவைத்து மாலைக்குள் அணையைப்போட்டுவிடுவான். மறுபடியும் ராத்ரி மற்றோரிடத்தில் அறுபட்டு ஜலமில்லாமல் வெறும் ஏரியாய்விடும். மறுபடியும் சொந்தக்காரன் காலையில்வந்துபார்த்து மனவருத்தப்பட்டு மறுபடியும் கூலியாட்களைவைத்து அணைபோடுவதுண்டு. இப்படி நெடுநாளாய் நடந்துகொண்டு வருகின்றது. அம்மார்க்கமாய் இந்த ப்ராஹ்மணச்சிறுவன் சென்றான். அப்போது ஏரிக்குடையவன் ஏரிகரைமேல் உட்கார்ந்துகொண்டு ப்ராஹ்மணச் சிறுவனைக்கண்டு நாயனா! இம்மார்க்கமாய் எங்குசெல்லு

கின்றாய் என்றுகேட்டான். சிறுவன் அதைக்கேட்டு ஐயா! நான் அன்னதானபலனைக் கேட்கப்போகின்றேனென்று சொன்னான். அப்பா! ஒன்றுசொல்லுகின்றேன் கேள். பகலெல்லாம் கஷ்டப்பட்டு இந்தஏரிக்கு அணையைப்போட்டு வேலையைமுடித்துச் செல்லுகின்றோம். இராக்காலங்களில் மற்றோரிடம் கரை அறுபடுவதுண்டு. இவ்விதமாய் நாள் தோறும் அறுபடுவதும் அணைபோடுவதுமாயிருக்கின்றது. எந்தக்காரணத்தினால் இவ்விதமாய் அறுபடுவதும் அணை போடுவதுமாயிருக்கின்றதோ அதையும் அறிந்துகொண்டு வாவென்று சொல்லியனுப்பினான். சிறுவன் நல்லதென்று சம்மதித்துச்சென்றான்.

பிறகு, சிலநாளைக்குள் காசிநகரம்சென்று ராஜனைக் கண்டு முனிவர்சொன்னசேதியைச்சொன்னான். அதற்கு ராஜன் மிகவும் ஸந்தோஷித்து நல்லதென்று சம்மதித்து அதுவரையில் ப்ராஹ்மணச் சிறுவனை உபசரித்துவந்தான். பிறகு ராஜன்மனைவி ப்ராஹ்மணச்சிறுவன் சொன்ன தேதி யில் ப்ரஸவவேதனைப்பட்டு ப்ராஹ்மணச்சிறுவன் சொன்ன லக்னத்தில் பிண்டம் தாயின்கர்ப்பத்திலிருக்கும் பையி லிருந்துவெளிபட்டு வந்து தங்கத்தட்டில் விழுந்தது. உடனே தாதிமார்கள் அக்குழந்தையைத் தட்டுடன் எடுத்துக்கொண்டு ஓடோடியும் கொண்டுவந்து ப்ராஹ் மணச்சிறுவன்கையில் கொடுத்தார்கள். அவன் அக் குழந்தையைத் தட்டுடன் ஏந்திக்கொண்டு அக்குழந்தை யைப் பார்த்து அன்னதானம் செய்வதனால் என்ன பல னுண்டாகுமென்று கேட்டான்.

முனிவரது தபோமஹிமையால் சிலநிமிஷங்கள் வரையில் அந்தசிசுவை மாயை மூடாமலிருந்தபடியால்

தன் பூர்வஜ்ஞானத்துடன் ப்ராஹ்மணச்சிறுவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பின் வருமாறு சொல்லுகின்றது.

சிசுவாயிருக்கும் தான் வேடனாயிருந்தபோது தேன் தினைமாவுண்டை அந்த ப்ராஹ்மணனுக்கு எவ்வளவு ப்ரமாணம் கொடுத்ததோ அவ்வளவு ப்ரமாணம் கையைக் காட்டி "அவ்வளவிற்கு இவ்வளவு உண்டாயிற்று" என்று சொல்லி, பிறகு இரண்டுகைகளையும் அகலமாய் விரித்து "இவ்வளவிற்கு எவ்வளவு உண்டாகும் அதை நீரே தெரிந்துகொள்ளும்" என்று சிசுவானதுசொல்லிற்று. ப்ராஹ்மணச்சிறுவன் அதன் விவரத்தை க்ரஹித்தபோதிலும் ராஜன்முதலானவர்களும் அறியவேண்டுமென்று எண்ணங்கொண்டு அதை விவரித்துச் சொல்லவேண்டுமென்று சிசுவைக்கேட்டான். அதற்கு அந்த சிசுவானது "நான் வேடனாயிருந்தபோது அவ்வளவு ப்ரமாணம் தேன் தினைமாவுண்டை உனக்குக் கொடுத்ததனால் இந்த ராஜன் வீட்டில் ஜன்மித்தேன். உன்தாய் இதைவிட விசேஷமாய் அன்னதானம் செய்வதினால் இன்னும் எப்பேர்ப்பட்ட விடத்தில் ஜன்மிப்பாளோ அதை நீரே தெரிந்துகொள்" என்று சொல்லிற்று. பிறகு ஸ்ரோத்ரியதாரன் சொல்லிய விஷயங்களையெல்லாம் சொல்லி அது எந்தக்காரணத்தினால் கரை அறுந்துவிடுகின்றதென்று கேட்டான். அதற்கு அந்தச் சிசுவானது சொல்லுகின்றது. "அவனுக்கு இரண்டுபெண்களுண்டு அவர்கள் புஷ்பவதியாய் வெகு நாளாயின. அவர்கள் இராக்காலங்களில் படுக்கும்போது முன்றானையை விரித்துப்போட்டு 'உஸ்' என்று படுக்கின்றார்கள். அந்ததோஷத்தினால் ஏரியின் கரை அறுபட்டுப் போகின்றது. ஆதலால், அந்தப்பெண்களை யாருக்காகிலும்

விவாஹம் செய்துகொடுத்துவிட்டால் கரை அருபடாமல் நின்றுவிடும்" என்றுசொல்லிற்று. பிறகுதாசியின் விஷயத்தைக் குறித்துக் கேட்டான். "பணப்பெட்டியும் விளக்கும் லக்ஷ்மியாதலால் அப்படிப்பட்ட லக்ஷ்மியை அவள் கால்மாட்டில் வைத்துக்கொண்டு ஸயனிப்பதினால் அது மாயமாய்விடுகின்றது. அவ்விரண்டையும் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸயனித்தால் அப்படியேயிருக்கு" மென்று சொல்லிற்று. அதன்பிறகு ஸர்ப்பம் சொல்லிய விஷயங்களைக்குறித்துக் கேட்டான். "அந்த ஸர்ப்பம் பூர்வஜன்மத்தில் நல்லமாந்த்ரீகத்தைக் கற்ற ஓர் புருஷன். அந்த மாந்த்ரீகத்தினால் விசேஷ பொருள்களைச் ஸம்பாதித்து அதைத்தான் உண்ணாமலும் ஸத்கைங்கர்யங்களுக்கு உபயோகப்படுத்தாமலும் பூமியில் புதைத்து வைத்து, தான் கற்ற மாந்த்ரீகத்தை ஒருவருக்கும் உபதேசிக்காமல் மரணமடைந்ததால் இப்படிப்பட்ட அவஸ்தைகள் நேரிட்டன. இப்பொழுது புற்றின்கீழ் விசேஷமான பொருள் இருக்கின்றது. அவைகளையெல்லாம் எடுத்து யாருக்காகிலும் தானங்கொடுத்துவிட்டால் பிறகு ஸர்ப்பமானது மரணமடைந்துவிடும்" என்று சிசுவானது சொல்லிற்று. அதன்பிறகு மாமரம் சொல்லியவிஷயங்களைக் குறித்துக்கேட்டான். "அந்த மாமரமானது பூர்வஜன்மத்தில் வைஸ்யனாயிருந்து விசேஷபொருளைச் சம்பாதித்துத் தானுண்ணாமலும் பிறருக்குக் கொடாமலும் பூமியில் புதைத்துவைத்து மரணமடைந்தான். அதினால் அவனுக்கு இப்படிப்பட்ட கதியுண்டாயிற்று. அந்த மரத்தின்கீழ் விசேஷபொருள் இருக்கின்றது. அதை யெடுத்து யாருக்காகிலும் தானம் செய்துவிட்டால் அதன்கனிகளை மனிதர்

களும் பக்ஷிகளும் புஜிப்பதுமன்றி அதன் நிழலில் ஜனங்களும் வந்து உட்காருவார்கள்.'' என்று சொல்லிற்று. அதன் பிறகு பசு சொல்லிய விஷயங்களையெல்லாம் கேட்டான். "ஓ ப்ராஹ்மண ஸ்ரேஷ்டரே! அந்தப்பசுவானது பூர்வ ஜன்மத்தில் மனிதனாயிருந்து ஓர் குடியானவன் வீட்டில் பசுக்களை மேய்த்துக்கொண்டுவந்து அவைகளுக்குத் தண்ணீர் காட்டாமலும் வைக்கோல் போடாமலும் தொழுவத்தில் கட்டிவிட்டுத் தன் எஜமானிடம்சென்று ஆண்டையே நான்போய்வருகின்றேன் என்று கேட்பான். பசுக்களுக்குத்தண்ணீர்காட்டி வைக்கோல்போட்டாயாவென்று ப்ரதிதினமும் எஜமான் கேட்பது வழக்கம். அதற்கு அவன், ஆம் தண்ணீர்காட்டி வைக்கோல்போட்டேனென்று சொல்வது, வழக்கம். பசுக்களோ, தங்களெதிரிலிருக்கும் தொட்டியிலுள்ள ஜலத்தையும் வைக்கோல்போரையும் ப்ரதிதினம் பார்த்துக்கொண்டே பசிதாஹங்களுடன் வெகுநாளிருந்து மரணமடைந்தன. ஆதலால், பூர்வஜன்மத்தில் வாயில்லாத ஜீவன்களை பசிதாஹங்களுடன் கொன்றபடியால் தான் இந்த ஜன்மத்தில் பசுவாய்ப்பிறந்து யதேஷ்டையாய்ப் புல்லும் ஜலமும் தன் ஸமீபத்திலிருந்தும், தாஹம் தணிந்து புல்லை மேய கழுத்துவளையாமல் பசிதாஹங்களுடன் பாதை பட்டுக்கொண்டிருக்கின்றது. இது அப்படியிருந்தே மரணமடையவேண்டும்'' என்றுசொல்லி முடிந்தவுடனே மாயைவந்து சிசுவைமூடிக்கொண்டது. மாயைமூடிக்கொண்டவுடனே சிசுவானது க்வா! க்வா!! க்வா!!! அதாவது எங்கே, எங்கே, எங்கே, எனக்கு பூர்வஜ்ஞானமிருந்ததே, அந்த ஜ்ஞானம் எங்கு போயிற்றென்று வீறிட்டது.

(இதன் விவரங்களை எல்லாம் மூன்றும்பதிப்பு "ஜீவ ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில்" பிண்டோத்பத்தி மாயாலக்ஷணத்தில் விரிவாய்க் காணலாம்.) இவைகளை யெல்லாம் கேட்டிருந்த ராஜன் முதலானவர்களெல்லோரும் இதுவரையில் நாம்கேள்விப்படாத விஷயங்களை யெல்லாம் இந்த ப்ராஹ்மணச் சிறுவனால் கேள்விப்பட்டோமென்று ஆஸ்சர்யப்பட்டு ப்ராஹ்மணச் சிறுவனுக்கு விஸேஷமான பொருள்களைத்தந்து அதைக் காப்பாற்றிக்கொண்டுபோவ தற்கு சிலமனிதர்களையுங்கூட அனுப்பினான். ப்ராஹ்மணச் சிறுவன் இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு தன் க்ரா மம் செல்லும்போது, வழியில் ஸ்ரோத்ரியதாரன் ஏரியைக் கண்டான். அந்த ஏரிகரையின்மீது முன்போலவே ஸ்ரோ த்ரியதாரன் உட்கார்ந்திருப்பதைக்கண்டு அவனிடம்சென்று ஐயா உன் இரண்டு குமாரத்திகளும் புஷ்பவதியாய் வெகு நாளாகின்றன, அவர்களுக்கு இன்னும் விவாஹம் செய்து கொடாததினால் அவர்கள் இராக்காலங்களில் முன்றானையை விரித்துக்கீழேபோட்டு 'உஸ்' என்று படுக்கின்றார்கள். அந்த தோஷத்தினால் ப்ரதிதினம் ஏரி உடைகின்றது. அவர்களை யாருக்காகிலும் விவாஹம் செய்துகொடுத்துவிட்டால் ஏரி உடையாமலிருக்குமென்று சொன்னான். ஸ்ரோத்ரியதாரன் அதைக்கேட்டு மிகவும் ஸந்தோஷமடைந்து ஐயா ப்ராஹ் மணஶ்ரேஷ்டரே நீர் கஷ்டப்பட்டு வெகுதூரம்சென்று இந்தச் சேதியைத் தெரிந்துகொண்டுவந்தீர். உம்மைவிட இனி நான் என் பெண்ணை யாருக்கும் கொடுக்கமாட்டேன். ப்ராஹ்மணர்கள், ப்ரஹ்ம க்ஷத்ரிய வைஶ்ய ஶூத்ரர் என்னும் நான்குஜாதியிலும் விவாஹம் செய்துகொள்ளலா மென்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. நாங்

களோ க்ஷத்ரியர்கள் ஆதலால், நீர் எங்கள் பெண்ணை யாதொரு தடையன்றி விவாஹம்செய்துகொள்ளலாமென்று சொன்னான். ப்ராஹ்மணச்சிறுவன் அதற்குப்பதில் யாதொன்றும்சொல்லாமல் சும்மா இருந்தான். பிறகு, ஸ்ரோத்ரியதாரன் ப்ராஹ்மணர்களை வரவழைத்து நல்ல முஹூர்த்தநாள் ஏற்படுத்தி, அந்த சுபலக்னத்தில் தன் இரண்டு குமாரத்திகளையும் பாணிக்ரஹணம்செய்துகொடுத்தான். ப்ராஹ்மணச்சிறுவன் அவர்களின் கழுத்தில் மாங்கல்யம் தரித்தவுடனே ஏரிகரை உடைவது நின்றுவிட்டது. அதன்பிறகு, ஏரியானது பூர்ணமாய் நிறைந்து வருஷத்தில்மூன்றுபோகம் விளைய ஆரம்பித்தது. ப்ராஹ்மணச்சிறுவன் சிலநாள் சென்றபிறகு மாமன்மாமியிடம் செலவு பெற்றுக்கொண்டு தன் க்ராமம் போவதற்கு, ப்ரயாணப்பட்டான். அப்போது ஸ்ரோத்ரியதாரன் விசேஷ த்ரவ்யத்தையும் பொன் வெள்ளி சாமான்களையும் ஸ்ரீதனமாய்க்கொடுத்து அவைகளைக் கொண்டுபோக, யானை ஒட்டைமுதலான சிலவற்றையும் ஸைன்யங்களுடன் அனுப்பினான். அவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு தாசியிருக்கப்பட்ட நகரம்சேர்ந்து தாசிவீடுசென்று, அம்மா நீ பணப்பெட்டியையும் விளக்கையும் கால்மாட்டில் வைத்துக்கொண்டு ஸயனிப்பதினால் பொழுதுவிடிவதற்குள் பணம் மாயமாய்விடுகின்றது. அவைகளைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸயனிப்பாயாகில் பணம் பெட்டியில் தானே யிருக்குமென்று சொன்னான். அதைக்கேட்ட தாசியானவள் ப்ராஹ்மணச் சிறுவன் சொல்லியதுபோல் அவ்விரண்டையும் தலைமாட்டில் வைத்துக்கொண்டு ஸயனித்தாள். மறுநாள்காலையில் பார்த்தபோது வைத்தபொருள்

வைத்தபடியேயிருக்க தாசியானவள்கண்டு அதிகசந்தோ ஷப்பட்டு ப்ராஹ்மணச்சிறுவனைப் பரிவாரங்களுடன் பத்து தினங்கள் வைத்துக்கொண்டு லக்ஷவராகன் கடன்வாங்கி ப்ராஹ்மணச் சிறுவனுக்கு பரிசாகக் கொடுத்தனுப்பினள். இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்டு ஸர்ப்பமிருக்கும் இடத்திற்குச்சென்று, ஓ சர்ப்பமே நீ பூர்வஜன்மத்தில் நல்ல மாந்த்ரீகத்தைக் கற்றமனிதனுயிருந்தாய். அந்த மாந்த் ரீகத்தினுல் விசேஷமான பொருளைச் சம்பாதித்து அதை நீ யுண்ணுமலும் சத்கைங்கர்யத்திற்கு உபயோகப்படுத்தா மலும் எல்லாவற்றையும் பூமியில் புதைத்துவைத்து மரண மடைந்தாய். அந்தக்கர்மத்தினுல் இந்தஜன்மத்தில் ஸர்ப்ப மாய்ப்பிறந்து இப்படிப்பட்ட வேதனைகள் அனுபவிக்க வேண்டியதாய் நேர்ந்தது. இப்பொழுது நீ இருக்கப்பட்ட புற்றின்கீழ் விசேஷமானபொருள் இருக்கின்றது. அதை யாருக்காகிலும் தானம் செய்துவிடுவாயாகில், உன்ஜீவன் போய்விடுமென்று சொன்னுன். அதைக்கேட்ட ஸர்ப்ப மானது மிகவும் சந்தோஷப்பட்டு ஐயா! உன்னைவிட நான் இனி யாருக்குக்கொடுக்கப் போகின்றேன், நீரே ஆட்களை வரவழைத்து புற்றைத்தோண்டி இருக்கப்பட்ட பொருள் களையெல்லாம் எடுத்துக்கொண்டு போவென்று சொல்லி ற்று. அதைக்கேட்ட ப்ராஹ்மணச்சிறுவன் தன்னிடமிருக் கும் ஆட்களால் புற்றைத்தோண்டி இருந்த பொருள்களை யெல்லாம் எடுத்து யானை ஒட்டைகளின்மீது எற்றின உட னே ஸர்ப்பத்திற்கு ஜீவன் போய்விட்டது. இவைகளையெல் லாம்எடுத்துக்கொண்டு மாவ்ருக்ஷமிருக்கும் இடம்சென்று ஓ மாவ்ருக்ஷமே நீ முன்ஜன்மத்தில் ஓர் வைஸ்யனுயிருந்து அளவற்றபொருள்களைச் சம்பாதித்து உன் வயிற்றிற்குத்

தின்னுமலும் தானம் செய்யாமலும் பூமியில் புதைத்து வைத்து மரணமடைந்தாய். ஆதலால், உனக்கு இந்த ஜன்மத்தில் மாவ்ருக்ஷமாய்ப் பிறக்கநேரிட்டது. இப்பொழுது உன்கீழ் விசேஷமானபொருள் இருக்கின்றது. அதை யாருக்காகிலும் தானம் செய்துவிட்டால் பாட்டைசாரிகள் உன் நிழலில் உட்கார்ந்து, உன்னால் தரப்பட்ட கனிகளையும் புஜிப்பார்கள். அன்றியும், பக்ஷிகளும் உன் கனிகளைப் புஜித்துக் கிளைகளில் உட்காரும் என்று சொன்னான். இவைகளையெல்லாம் கேட்ட மாவ்ருக்ஷமானது மிகவும் சந்தோஷப்பட்டு "ஐயா உன்னைவிட நான் இனி யாருக்குத்தரப்போகின்றேன், என் கீழ்இருக்கப்பட்ட தனத்தை நீயே எடுத்துக்கொண்டு போ" வென்று சொல்லிற்று. அதைக்கேட்ட ப்ராஹ்மணச் சிறுவன் தன்னிடமிருக்கும் ஆட்களை வரவழைத்து மாமரத்தின்கீழ் இருக்கப்பட்ட த்ரவ்யத்தை எடுப்பித்து யானை ஒட்டைகளின்மீது ஏற்றிக்கொண்டு சென்றான். அதன்பிறகு, பசு இருக்கப்பட்ட இடம் சென்று ஓ பசுவே நீ பூர்வஜன்மத்தில் மனிதனாயிருந்து ஓர் குடியானவன் வீட்டில் பசுக்களை மேய்த்துக்கொண்டு வந்து அவைகளுக்குத் தண்ணீர் காட்டாமலும் வைக்கோல் போடாமலும் மாட்டுத் தொழுவத்தில் கட்டிக்கொண்டுவந்தாய். உன் எஜமானன் உன்னைப் பார்த்துப் பசுக்களுக்குத் தண்ணீர்காட்டி வைக்கோல் போட்டாயா வென்று கேட்டால், ஆம் தண்ணீர்காட்டி வைக்கோல்போட்டேனென்று ப்ரதிதினம் சொல்லிக் கொண்டேவந்தாய். அப்பசுக்கள் தன் எதிரிலிருக்கும் தொட்டியிலுள்ள ஜலத்தையும் வைக்கோல் போரையும் பார்த்துக்கொண்டே பசி தாஹங்களுடனிருந்து ஜீவன்களை

விட்டன. ஆதலால், அது போலவே நீ இந்தச்சன்மத்தில் பசுவாய்ப்பிறந்து எதிரிலிருக்கும் ஜலத்தையும் புல்லையும் பார்த்துக்கொண்டே ப்ராணனை விடவேண்டுமென்று சொல்லிவிட்டுத் தன் க்ராமம்சென்று தாயின்பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து எழுந்து நின்று ஆதிமுதல் அந்த்யம் வரையில் நடந்தவைகளை ஸவிஸ்தாரமாகச் சொல்லித் தன் இரண்டு மனைவிமார்களையும் தாயினிடம் ஒப்பித்துத் தான்கொண்டுவந்த பொருள்களுக்கெல்லாம் அநேக க்ராமங்களை வாங்கிவிட்டு அதில்வரப்பட்ட வருமானங்களையெல்லாம் தன் புத்ர பௌத்ராதி தலைமுறை தலைமுறையாய் அன்னதானம் செய்யும் பொருட்டு சிலா ஸாஸனம் ஏற்படுத்திவிட்டு, தான் வெளியில் எங்கும் செல்லாமல் குரு உபதேசித்த ப்ரஹ்மஜ்ஞானத்தைச் சாதனம் செய்துகொண்டுவந்தான். இப்படிப்பட்ட புருஷனே மனிதனென்று சொல்லப்படுவான்.

ஆதலால், இதைவாசிக்கப்பட்ட ஸஹோதரர்களும் ஸஹோதரிகளும் இந்த ப்ராஹ்மணச்சிறுவன் செய்யும் அன்னதானம்போலவே செய்துகொண்டு வரவேண்டும். அப்படிச்செய்ய ஶக்தியில்லாதவர்கள் தம் ஶக்தியானுஸாரமாய் அன்னமிட்டுக்கொண்டு வரவேண்டும். மரணகாலத்தில் நம்முடன்கூட வரப்பட்டது யாதொன்றுமில்லை. நம் கைகளால் செய்யப்பட்ட தர்மம் ஒன்றே நம்முடன் கூடவந்து நம்மைக் காக்கப்பட்டதென்று கண்டிதமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதே இந்நூலின் கருத்து.

# தத்வபரிசோதனே.

**சிஷ்யன்** :—ஓ ஆசார்யரே அஜ்ஞானமென்பது எது?

**ஆசார்யர்** :—தன்னைத்தான் அறியாமல் இதா விஷயங்களில் ப்ரயத்நப்படுவதே அஜ்ஞானமென்று சொல்லுவார்களேயொழிய அஜ்ஞானமென்று ஓர்வஸ்து இல்லை. அஜ்ஞானமென்பது அறியாத்தன்மையே.

**சிஷ்யன்** :—மாயையென்பது என்ன?

**ஆசார்யர்**:—மாயை யென்பது பகவானுடைய லீலையேயொழிய மாயையென்று ஓர்வஸ்து இல்லை. ஆதலால், இந்த மாயாஸ்வரூபத்தைச் சொல்லுகிறேன் கேள்.

பூலோகத்தில் கோசலதேசத்தில் காதி என்னும் பெயருள்ள ஓர் ப்ராஹ்மணன் இருந்தான். அவன் ஒரு காரியத்தை மனதில் நினைத்து, உறவினரை விட்டுநீங்கி வனத்திற்குச்சென்று ஒரு தடாகநீரின் நடுவில், கழுத்தளவு முழுகி நின்று, விஷ்ணுமூர்த்தியை நினைத்து எட்டுமாதங்கள்வரையில் மேலாகிய தவத்தைச்செய்து வந்தான். பிறகு விஷ்ணுவானவர் ப்ரத்யக்ஷமாகி, உனக்கென்ன வரம் வேண்டுமென்று கேட்டார். அதைக்கேட்ட ப்ராஹ்மணன் கரையேறிவந்து,திருமாலைக் கைகுவித்து வணங்கி, ஸ்வாமீ! உமது மாயாஸ்வரூபத்தை தர்சிக்க விரும்புகின்றேன் என்றான். அதைக்கேட்ட பகவான்; அப்படியே என்மாயாஸ்வரூபத்தைக் காணக்கடவாய், கண்டபிறகு அதனை நீங்கக் கடவை யென்று அநுக்ரஹித்து மறைந்தவுடன் பகவானைச்சேவித்த சந்தோஷத்தினால் அதிக உத்ஸாஹங்

கொண்டு தன்னை மறந்து அநேகநாள்பர்யந்தம் தன் த்யானத்திலேயே யிருந்துவிட்டான். இவ்வாறு சிலமாதங்கள் சென்றன. பிறகு, கண்களை விழித்துப்பார்த்து முன்னே திருமால் அருளிச்செய்த மாயாஸ்வரூபத்தைச் சிந்தித்துக் கொண்டேசென்று ஒரு தாமரைத் தடாகத்தில் மார்பளவு ஜலத்தில் நின்று வலதுகை மோதிரவிரல், பெருவிரல்களால் மூக்கை மூடி ஒரு முழுக்குப்போட்டு சிரஸை மேல் எடுப்பதற்குள்; உறவினரிருக்கிற தன்வீட்டில், தான் வ்யாதியினால் இறந்தவனாகத் தன்னைக்கண்டான். மேலும் உறவினர், தன்மனைவி, தன்தாய் முதலியோர் தன்மேல் விழுந்து கட்டிக்கொண்டு கதறவும் பார்த்தான். இதற்குமேல் தன்னை ஸ்மசானத்திற் கொண்டுபோய்ச் சுட்டுச் சாம்பலாக்கவும் பார்த்தான். நீரின் நடுவிலிருக்கிற அந்தணன், பின்னும் ஊணதேசத்தின் ஒரு நகர முடிவில் இருக்கிற நீசர் குலத்தில் ஒரு பெண்ணின் வயிற்றில், வெந்த கரிக்கட்டை போல ஆண்மகனாய்ப் பிறந்து, அந்தக் குலத்துப் பெண்ணொருத்தியை மணம் புணர்ந்து, மனமும் ப்ராணவாயுவும் போல வொற்றுமையாய்க் கலந்து வாழும் நாளில், தன் குலம் விளங்கச் சில புத்ரர்களைப் பெற்றான். சில நாளில் மூப்பு வந்தடையவே தன் சேரிக்குக் கொஞ்சதூரத்தில் ஒரு சிறுதழைக் குடிசைகட்டி அதில் வசித்துக்கொண்டிருக்கும்போது, தன் மக்களுக்கும் மூப்பு வந்தடைந்தது. தன் மனைவி மக்களுக்கும் தனக்கும் ஒருமிக்க கிழத்தனம் வந்ததைப்பார்த்து வருந்துங்காலத்தில், தன்னைத் தவிர மற்றவரையெல்லாம் காலன் கொண்டுபோய்விட, தான் தனியேயிருந்து, வாய்விட்டரற்றி சகிக்கமாட்டாமல், மனங்கலங்கி நிராசையுள்ளவனாய் அநேக நாடுகளில்

வெகுகாலம் திரிந்துகொண்டிருப்பதாய்க் கண்டான். இவ்வாறு திரிந்துகொண்டே கீரநாட்டின் ராஜதானியில் புகுந்து சொர்க்கலோகம்போல் பொன்மயமாயிருக்கும் வீதியின் வழியாய் வந்துகொண்டிருப்பதையும் கண்டான். அதுசமயம் அவ்வூரரசன் மாண்டிருந்தபடியால் ராஜ்ய பரிபாலனம் செய்ய வேற்றரசனை நியமிப்பதற்காகப் பட்டத்து யானையை மந்த்ரிகளால் அலங்கரித்து, அதன் துதிக்கையில் மாலையைத் தந்து செங்கோல் செலுத்த வேற்றரசனைக் கொண்டுவரக்கடவாய் என்று சொல்லி ஏவினார்கள். அவ்வார்த்தையைக் கேட்ட யானையானது அதிவேகமாய்ச் சென்றது. அப்போது ராஜாதி ராஜர்கள் எல்லோரும் யானைக்கெதிரில் சென்று நிற்க அவர்களுக்கு மாலையைச் சூட்டாமல் அவர்களிலிருந்து தப்பித்துக்கொண்டு முன் சொல்லிய பொன்மயமாயிருக்கும் வீதியின் வழியாய் வந்தது. அப்போது சண்டாளன் யானை வரும் வேகத்தைப் பார்த்துப் பயந்து ஓர் மூலையில் பதுங்கிக்கொண்டான். ஷை யானையானது இவனுக்கு நேராய் வந்து அவன் கழுத்தில் மாலையைத் தரித்துத் தன் பிடரியில் ஏற்றிக்கொண்டு போவதையும் கண்டான்.

**சிஷ்யன்** :—ஓ ஸ்வாமீ! தன்னை எதிர் நோக்கி வரப்பட்ட மன்னாதி மன்னர்களுக்கெல்லாம் மாலையைத் தரிக்காமல் கேவலம் நீசனாயிருக்கும் சண்டாளனது கண்டத்தில் மாலையைத் தரிப்பதற்குக் காரணம் யாது?

**ஆசார்யர்** :—நாயனா! அந்தக் காரணத்தைச் சொல்லுகின்றோம் கேள். இப்போது மாயைக்குள் அகப்பட்டிருக்கும் சண்டாளன், காதி என்னும் ப்ராஹ்மணனென்று உனக்கு நன்றாய்த் தெரியவருகின்றதல்லவா? இவன்

ஆதியில் விஷ்ணுவைக்குறித்துத் தவம் செய்தபடியால் ஸர்வத்திற்கும் ஆதாரமாயிருக்கப்பட்ட பரப்ரஹ்மமே ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாஸமென்னும் பஞ்ச பூதங்களால் விஷ்ணு ரூபத்தைத் தரித்துக்கொண்டு அவனிடம் சென்று அவன் கேட்ட வரத்தைத் தந்து மறுபடியும் பஞ்சபூதங்களையும் அந்தந்த பூதத்தில் ஐக்யம் செய்து தான் யதாரீதியாய் பரப்ரஹ்மமாகவே இருக்கும்.

நாயனு! இவன் தவம் செய்யும் விஷயம் அந்த பரப்ரஹ்மம் எப்படி அறியுமென்று எண்ணுகின்றுயோ? அதன் ரஹஸ்யத்தைச் சொல்லுகின்றேம் கேள். மனிதர்கள் எதை யெதை நினைத்துத் தவம் செய்கின்றுர்களோ அவைகளையெல்லாம், அவர்களின் ஹ்ருதய கமலத்தில் சாக்ஷிஸ்வரூபமாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ஸாக்ஷாத் பரப்ரஹ்மத்தின் அம்ஸமாகிய ஆத்மா அறிகின்றது. எப்பொழுது ஆத்மா அறிகின்றதோ அப்பொழுதே பரப்ரஹ்மம் அறிந்ததாகும். ஆத்மா, பரப்ரஹ்மம் என்று நாம பேதமேயொழிய அதன் குணம்மாத்ரம் ஒன்றே. எப்படியெனில், ஏரியிலுள்ள ஜலம் ஊர்முழுதும் இருக்கப்பட்ட ஜனங்களின் தாஹத்தைத்தணிக்கச் செய்கின்றது. குடத்து ஜலம் ஓர் குடும்பத்திலுள்ள ஜனங்களின் தாஹத்தைத் தணிக்கச் செய்கின்றது. ஆதலால் பெரிது சிறிதென்னும் பேதமே யொழிய காக்கும் 'தன்மை ஒன்றேயாம். அது போலவே ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள பேதமென்று அறியவேண்டும்.

இப்படி சாக்ஷிஸ்வரூபமாயிருக்கும் ஜீவாத்மா, யானையிலும் யிருப்பதால் மேற்சொல்லிய சண்டாளனது கண்டத்தில் மாலையைத்தரிக்கும்படி அந்த யானையினது மன

திற்குத் தோன்றும்படி ஆத்மா செய்விக்கின்றது. அதனுல் தன்னை எதிர் நோக்கி வரப்பட்ட மன்னவர்களுக்கெல்லாம் மாலையைத்தரிக்காமல் சண்டாளனிருக்குமிடத்திற்கே நேராய்ச் சென்று அவன் கழுத்தில் மாலையைச் சூட்டிப் பிடரியில் ஏற்றிக்கொண்டு மந்த்ரிமார்களிடம் கொண்டு போய் விடும்படியாய் பரப்ரஹ்மத்தின் அம்ஸமாகிய ஆத்மா யானையினது மனதிற்குச் சாவி கொடுத்துத் திருப்பிவிட்டபடியால், அந்த யானை அவ்விதமாய்ச் செய்ததென்று அறியக்கடவாய்.

யானையால் கொண்டுவரப்பட்ட இவனை மாதர்கள் அலங்கரித்தார்கள், பழைய மந்த்ரிமார்களும் சேனுதிபதி முதலானோர்களும் இவனே அரசனுக முடிசூட்டி, 'கவலன்' என்கிற நாமமளித்து, அவனது ஆஜ்ஞையை சிரஸாக வஹித்து நடந்தார்கள். அப்போது 'கீரதேஸத்தை' நீதியாகச் செங்கோல் செலுத்திவந்தான். இப்படி எட்டு வருஷங்கள் கழியவே, ஒருநாள் தனியனுய், காலால் நடந்து, தன் அரண்மனையின் தெருப்புறத்தில், நீச வேஷத்தோடு உலாவுஞ் சமயத்தில், தன் ஊரில் தனக்கு பந்துவாயிருப்பவர்களில் சிலர் கீரதேஸத்திற்குள் புகுந்து ராஜன் அரண்மனைக்கு நேராய் வந்துகொண்டிருக்கும்போது, அவர்களில் ஒரு முதியோன் வந்து இவனைப் பார்த்தவுடன் ஆசையோடு தழுவி முன்பெய்யரைச் சொல்லி, எங்களுக்குப் பழைய சுற்றத்தானுகிய நீ, எம்மைவிட்டு எங்கே போனுய்? இப்போது எவ்விடத்திலிருக்கின்ருய்? என்று இவனது பழைய வரலாற்றை உள்ளபடியே சொல்லி விசாரித்தான். அதைக்கேட்ட இவன், இங்குள்ள யாராயினும் இதனைக் கேட்பாராயின் நமக்குப் பழியாய் முடியுமென்று நினைத்து

அச்சண்டாள முதியோனை, உரத்த சப்தத்தோடு அதட்டித் துரத்திவிட்டு, விரைவாகத் தனது அந்தப்புரத்தில் ப்ரவேசித்தான். சாளரவாயிலில் நின்று இவற்றையெல்லாம், கண்டும் கேட்டுமிருந்த ஸ்த்ரீகளெல்லோரும், ராஜஸ்திரீ மந்த்ரிமார்கள் முதலானபேர்களுக்கும் அறிவிக்க, இவன் பூர்வத்தில் சண்டாளனாயிருக்கலாமென்று அவர்களும் ஊஹித்தறிந்துகொண்டு, மிகவும் மனவருத்தமடைந்தார்கள். இவன் மாத்ரம் மனங்கலங்காமல், அவைகளை அறியாதவன் போலப் பழையபடியே ஸிம்ஹாஸனத்திலிருந்தான். இவனை மாதர்கள் மந்த்ரியர் முதலானோர்கள் தீண்டுதற்கு அஞ்சினவராய் ப்ரேதத்தை அருவருத்தல்போல அருவருத்திருந்தார்கள். இவனோ கல்வி செல்வங்களிரண்டுமில்லாத ப்ரயாணிகன் போன்றிருந்தான். அந்த நகர மாந்தரெல்லோரும், இவனுடைய சம்பந்தத்தால் நாமெல்லோரும் பதிதரானோம். இனி ஒரு ப்ராயச்சித்தத்தாலும் பரிசுத்தராகமாட்டோம், நாம் பரிசுத்தராகாதற்பொருட்டுத் தீப்பாய்வோமென்று நிச்சயித்து, நெருப்பைவளர்த்தி அதில் எல்லோரும் விழுந்துமடிந்தார்கள். இவன், அவர்கள் மடிந்ததைக்கண்டு, நமது தொடர்பாலல்லவோ இத்தனைபேரும் நாசமடைந்தார்கள். இனி நாமும் மாண்டுபோவதே தக்க காரியமென்று தீமூட்டி, அதில் விழுந்தபோது, அந்தத் தீயானது இளந்தளிரை எரிப்பதுபோல இவன் சரீரத்தை எரித்தது. உடனே நீரில் மூழ்கியிருந்த காதியென்னும் வேதியன் ஜலத்திற்குள் மூழ்கியிருந்த சிரசை மேலெடுத்தவுடன் வேதியன் சரீரம் பதைபதைத்து உடனே நீரைவிட்டு மேலெழுந்து மஹா மாயையினின்று நீங்கி ஈஸ்வரனது சர்வசக்தியைக்குறித்துப் புகழ்ந்து மனங்களித்திருந்தான்.

இக்கதை மேலும் போம். இவ்விடத்திற்கு வேண்டியது இவ்வளவே யாதலால் இம்மட்டில் நிறுத்தப்பட்டது. கதைமுழுதும் அறிய விரும்புவோர் ஞானவாசிட்டம், உரு-ஆவது கதையில் விரிவாய்க் காணலாம்.

**சிஷ்யன்** :—ஸ்வாமீ, ஓர்முழுக்குப் போட்டு சிரசை எடுப்பதற்குள் எத்தனையோவருஷங்கள் சென்றுவிட்டனவே இதற்குக்காரணம்யாது?

**ஆசார்யர்** :—குழந்தாய்! அதற்குக்காரணம் சொல்லுகின்றோம் கேள்:—ப்ரஹ்மதேவருக்கு இருக்கப்பட்ட வயசை அனுசரித்து, தன் மாயாஸ்வரூபத்தைத் தர்சிக்கும்படி ஸங்கல்பித்தார். அதனால் இத்தனைவருஷங்கள் மாயையில் கட்டுப்பட்டிருந்தான். இவன் இன்னும் எத்தனையோ கோடிஜன்மங்கள் எடுக்கவேண்டுமென்று ஸங்கல்பித்தாலும் அத்தனை கோடி ஜன்மங்களையும் எடுக்கவும் எடுக்கலாம். ப்ரஹ்மதேவருக்கு ஆயுர்ப்பாகம் எப்படியென்றால், க்ருத யுகம், த்ரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் இப்படிப்பட்ட யுகங்கள் இரண்டாயிரமானால் ப்ரஹ்மதேவருக்கு ஒரு நாளாகும். இந்நாட்கள் முப்பதானால் ஒருமாதம். பன்னிரண்டு மாதங்களானால் ஒருவருஷம். இப்படிப்பட்ட வருஷங்கள் நூறானால் ப்ரஹ்மதேவருக்கு ஆயுர்ப்பாகம் முடியும். நாயனு, இந்த மாயாசமுத்ரத்தில் நாரதர் அகப்பட்டுக்கொண்டு பட்டபாட்டை ஸ்ரீ க்ருஷ்ணார்ஜுன ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை அத்யாயம், 5 ஸ்ரீ 15-ல், விவரமாய் எழுதியிருக்கின்றது, அதை வாசித்துப்பார். நீ இந்த விஷயங்களை எதற்காக விசாரிக்கின்றாய்?

**சிஷ்யன்** :—ஸ்வாமீ மோக்ஷமடையும்பொருட்டு விசாரிக்கின்றேன்.

ஆசார்யர் :—மோக்ஷமென்பது விடுதலை. விடுதலையென்றால், இதற்குமுன் ஏதாகிலும் ஓர் பிடிப்பு இருக்கவேண்டும். பிடிப்பு என்றால் பந்தம். மோக்ஷத்தை அடைய விருப்பங்கொள்ளும் நீ இருபத்து நான்கு தத்வங்களில் எந்ததத்வம் உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கின்றதோ அதை அறிந்து விடுதலை செய்துகொள்ள வேண்டியதேயொழிய, மாயை அஜ்ஞானம் ஜகத்ஸ்ருஷ்டி முதலானவைகளை விசாரிப்பதினால் ப்ரயோஜனமில்லை.

சிஷ்யன் :—எனக்கு எதனால் ஜ்ஞானமில்லை.

ஆசார்யர் :—சிஷ்யா! சிவப்பு கறுப்பு வெளுப்பு, ருசி அருசி, பக்வம் அபக்வம், லாபம் நஷ்டம், ந்யாயம் அந்யாயம் முதலானவைகளை ஜ்ஞானமில்லாமல் நீ எப்படி அறிந்தாய்? உனக்கு ஜ்ஞானமில்லாவிடில் அஜ்ஞானத்தினால் அறிந்தாயா, அல்லது ஜ்ஞானத்தினால் அறிந்தாயா?

சிஷ்யன் :—ஸ்வாமீ எனக்கு ஜ்ஞானமிருப்பதாகவே ஏற்படுகின்றது. ஜ்ஞானமென்றால் எதுவோ வென்றிருந்தேன், எனக்கு ப்ரஹ்மஜ்ஞானமில்லையென்று தோன்றுகின்றது.

ஆசார்யர் :—ப்ரஹ்மஜ்ஞானமென்று ஒன்றும், இந்த்ரிய ஜ்ஞானமென்று ஒன்றும், சந்த்ரஜ்ஞானமென்று ஒன்றும் உண்டோ?

சிஷ்யன் :—ஸ்வாமீ அது அறியாத்தன்மையினாலல்லவோ கேட்க நேர்ந்தது. எந்த மார்க்கத்தை அனுஷ்டித்தால் மோக்ஷமாகிய நித்யானந்த பதவியை அடைவேனோ அம்மார்க்கத்தை அடியேனுக்கு அனுக்ரஹிக்கவேண்டும்.

ஆசார்யர் :—எந்தக்காரணத்தினால் உன்னுடைய கால் நொண்டியாயிற்றோ அதை ஆலோசித்துப்பார். அப்படிப்

பார்ப்பதே ஜ்ஞானமார்க்கம். "ஶ்ரத்தாவாந் லபதே ஜ்ஞாநம்" என்று ஸ்ரீக்ருஷ்ணபகவான் சொல்லியிருப்பதுபோல் ஶ்ரத்தையுடைய புருஷன் ஜ்ஞானமும் மோக்ஷமும் அடைவான்.

## சிஷ்யன் தத்வ பரிசோதனையை ஆலோசிப்பது.

---

சிஷ்யன் :—என்கால் எந்தக் காரணத்தினால் நொண்டியாயிற்றோ அதை ஆலோசித்துப்பார் என்று ஆசார்யர் சொல்லியிருக்கின்றாரல்லவா? அதை இப்பொழுது ஆலோசிக்கலாம்.

என்கால் நொண்டியாயிருக்கின்றதே, இந்த நொண்டி ஶரீரம், நானே ஸ்ருஷ்டித்துக்கொண்டதல்ல. அப்படி நானே ஸ்ருஷ்டித்துக் கொள்ளும் பக்ஷத்தில் என் இஷ்டம் போல் நல்ல சரீரமாய் ஸ்ருஷ்டித்துக்கொள்வேனல்லவா? என் தாயின் கர்ப்பத்திலேயே யல்லவா இந்த நொண்டி சரீரம் எனக்குண்டாயிற்று.

என் தாயின் கர்ப்பத்தில் ப்ரவேசித்து என் காலை நொண்டியாய் செய்வதற்கு மனுஷ்யர்களால் ஆகமாட்டாதல்லவா? நான் முன்செய்த பாபத்தினால் தாயின் கர்ப்பத்திலேயே என்னை எவரோ ஸிக்ஷை செய்ததாய் ஏற்படுகின்றது. ஆதலால், அப்படி ஸிக்ஷை செய்தவரே ஸர்வத்திற்கும் அதிகாரியான ஈஸ்வரனென்று அறியவேண்டும்.

கர்ப்பத்திலேயே என்னை ஸிக்ஷித்திருப்பதால் இதற்கு முன்ஜன்மத்தில் நான் செய்த பாபத்திற்காக என்னை ஸிக்ஷித்தார்போல் தோன்றுகின்றது.

இந்த ஜன்மத்தில் நான் பாபம் செய்தால், மறுஜன்மத்தில் எப்படிப்பட்ட ஸிக்ஷை ஏற்படுமோ தெரியவராது.

ஆனல், நான் முன்ஜன்மத்திலேயு மிருந்தேன், இந்த ஜன்மத்திலேயு மிருக்கின்றேன், வருகிற ஜன்மத்திலும் இருப்பேன். இது விஷயம் இப்படியே அந்தந்த ஜன்மங்களிலும் ஆலோசித்திருந்தால் மூன்று ஜன்மங்களிலும் தெரியவரும். இந்த மூன்று ஜன்மங்களிலும் நான் இருப்பதாய் ஏற்படுகின்றது. ஆதலால், நான் நித்யன்.

இதற்கு முன் ஜன்மத்தில் நான் இல்லாமலிருக்கும் பக்ஷத்தில் எனக்கு பாபமில்லை, என்கால் நொண்டியாயிராது, பாபம் செய்யாதவனை ஸிக்ஷிப்பதற்கு ந்யாயமில்லை. பாபம் செய்யாதவனை ஸிக்ஷித்தால், அவன் ஈஸ்வரனாக மாட்டான்.

நான் முன்ஜன்மத்தில் மரணமடைந்திருந்தால், இந்த ஜன்மத்தில் எப்படிப் பிழைத்திருப்பேன்? மரணமென்றால், இந்த ஶரீரத்தைவிட்டு மற்றொரு ஶரீரத்தில் ஆத்மா ப்ரவேசிப்பதே மரணம். (பகவத்கீதை அத்யாயம் 2, ஶ்லோகம் 22, பார்க்க) நான் மறு ஜன்மத்தில் பசுவாய் ஜன்மித்தால் அப்பொழுது எனக்குக் கைகள் இருக்கமாட்டாதல்லவா? ஆதலால், கைகள் இந்த ஶரீரத்திலேயே நின்று விடுகின்றன, எனக்குக் கைகள், இருந்தால் நான் ஜன்மிக்கும் பசுவின் ஶரீரத்திலும் இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அவைகள் இந்த ஶரீரத்திலேயே நின்றுவிட்டன. ஆதலால் கர்மேந்த்ரியங்கள் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லை. ஆதலால் கர்மேந்திரியம் நானல்ல, கர்மேந்த்ரியங்கள் சரீர சம்பந்தமேயல்லாமல் அஶரீரியாகிய எனக்கு ஸம்பந்தமில்லை.

புழுவாய் ஜன்மித்தால் ஶ்ரோத்ரேந்த்ரியங்கள் இல்லை. ஆதலால், அதுவும் ஶரீரஸம்பந்தமே யல்லாமல் அஶரீரியா

கிய எனக்கு ஸம்பந்த மானதல்ல. ஆதலால், ஜ்ஞானேந்த்ரியங்கள் என்னைப்பிடித்துக்கொண்டிருக்கவில்லை.

வ்ருக்ஷமாய் ஜன்மித்தால் இருபத்துநான்கு தத்வங்களும் இல்லை. இந்த இருபத்துநான்கு தத்வங்களும் ஶரீரத்திற்கு ஸம்பந்தமேயல்லாமல் அஶரீரியாகிய எனக்கு ஸம்பந்தமானதல்ல. இந்த இருபத்துநான்கு தத்வங்களும் என்னைப்பந்திக்கமாட்டா. எல்லா தத்வங்களும் ஶரீரத்தையே பிடித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால், வ்ருக்ஷமானது எதை அறியுமென்றால் ஸ்பர்சத்தைமாத்ரம் அறிகின்றது. வ்ருக்ஷமாய் ஜன்மித்தால் எல்லாதத்வங்களும் நசித்து அறிவுமாத்ரம் சேஷித்து நித்யமாய் இருக்கின்றன. சர்ப்பங்களுக்குக் கண்கள் செவிகள் ஒன்றாயிருக்கின்றன. வௌவால் என்னும் பக்ஷிக்கு ப்ராணாபானங்கள் ஒன்றாயிருக்கின்றன. இவ்விதமாய் அந்தந்த ஶரீரங்களுக்குத் தக்கபடி உயர்வும், தாழ்வும், ஸ்தானபேதமும் உண்டு. ஆதலால், புண்யபாபங்களுக்குத்தக்க ஶரீரம் ஏற்படுகின்றது. எதற்கும் ஸ்திரமான ஶரீரமேயில்லை. ஶரீரம் நானல்ல ஶரீரம் என்னைப் பந்தப்படுத்தவில்லை. நான் எப்படிப்பட்டவனென்றால், ஶரீரத்திற்கு உண்டாகும் சுகதுக்கங்களைத் தெரிந்துகொள்ளப்பட்டவன் ஆதலால், நான் அறிவுடையவனாகவே இருக்கின்றேன்.

பசுவாய் ஜன்மித்தால் புல்லையல்லவோ புஜிக்கவேண்டும். ஆதலால், ஆஹாரம் ஶரீரஸம்பந்தமேயல்லாமல் அஶரீரியாயிருக்கும் எனக்கு சம்பந்தமானதல்ல.

மேலும் இந்த தேஹத்திலிருக்கும் செவிடு, ஊமை, கூன், குருடு முதலாகிய அங்கஹீனங்கள் இந்த தேஹத்திலேயே நின்று மற்றொருதேஹத்தில் வாராமலிருப்பதால்

இது. ஶரீர ஸம்பந்தமேயல்லாமல் அஶரீரியாகிய என்னை ஸம்பந்தித்ததல்ல.

இந்த ஜன்மத்திலுள்ள தாய்தந்தைகள், பார்யை புத்ரர்கள் புத்ரிகள் மரணமடைந்து மற்றொரு சரீரமெடுத்தபோது இவர்கள் எவ்வித பந்துவாயிருப்பார்களோ, அல்லது ஸத்ருவாயிருப்பார்களோ மித்ருவாயிருப்பார்களோ, அல்லது எந்தத்தேசத்தில் ஜன்மிப்பார்களோ, தெரியவராது. ஆதலால், இவர்களும் ஶரீர ஸம்பந்தமானவர்களேயல்லாமல் அஶரீரியாகிய எனக்கு ஸம்பந்தப்பட்டவர்களல்லர். இப்பொழுது இந்தச்சொத்துக்கள் என்னுடையதென்னும் எண்ணத்தினால் அண்டைவீட்டுச் சொத்தை அபஹரிக்கக்கோருகின்றேன். அண்டைவீட்டில் நான் இருந்தால் அப்போது இந்தவீட்டுச் சொத்தையல்லவோ அபஹரிக்க எண்ணவேண்டும். ஆதலால், எனக்குச் சொந்தமாகிய சொத்துக்கள் எதுவுமில்லை. சொத்துக்கள் ஶரீர ஸம்பந்தமேயொழிய அஶரீரியாகிய எனக்கு ஸம்பந்தமானதல்ல.

இந்த ஜன்மத்தில் நான் ப்ராஹ்மணனாய் ஜன்மித்திருக்கின்றேன், மற்றொரு ஜன்மத்தில் மிலேசனாய் ஜன்மித்தால் இந்த வர்ணாஸ்ரமதர்மம் அப்போதிராதல்லவா? ஆதலால், இந்த வர்ணாஸ்ரமதர்மம் ஶரீரசம்பந்தமாகவே இருக்கின்றது.

இப்பொழுது நான் சைவமதத்திலிருந்து வைஷ்ணவமதத்தைத்தூஷிக்கின்றேன். வைஷ்ணவனாய் ஜன்மித்தால், வைஷ்ணவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு சைவர்களையல்லவோ தூஷிக்கவேண்டும். ஆதலால், மதங்களும் ஶரீர ஸம்பந்தமேயொழிய அஶரீரியாகிய எனக்கு ஸம்பந்தப்பட்டவைகளல்ல.

நான் ஜன்மித்த பதினோராவது நாள் புண்யாஹ வாசனம் செய்து எனக்கு க்ருஷ்ணனென்னும் பெயரை என் தாய்தந்தைகள் வைத்தார்கள். இப்படிப்பட்ட பெயர்கள் முன்ஜன்மங்களில் எத்தனையோ பெயர்களை யுடையவனாயிருந்தேனல்லவா? எனக்கு ஆயுர்ப்பாகம் நூறுவருஷமென்றல்லவா ப்ரஹ்மதேவன் ஸ்ருஷ்டித்தது. நான் அஸ்வமாய்ப் பிறந்தால் அஸ்வத்திற்கு முப்பத்திரண்டு வருஷமல்லவா ஆயுர்ப்பாகம்? வேதத்தில் ஶரீரத்திற்கே ஆயுர்ப்பாகம் விதிக்கப்பட்டதே யல்லாமல் அஶரீரியாகிய எனக்கு ஆயுர்ப்பாகம் விதிக்கவில்லை. ஆதலால், நான் ஸதா மோக்ஷத்திலேயே இருந்துகொண்டிருக்கின்றேன்.

இதுவரையில் என் அறிவினால் பரிசோதித்தபடியால் எந்த தத்வங்களும் என்னை பந்திக்காமல் நித்யனாய் ஜ்ஞானஸ்வரூபனாய் மாத்ரமே இருக்கின்றேன். ஜ்ஞானஸ்வரூபனென்று சொன்னால், ஜ்ஞானத்தை அறியவேண்டியவன் ஒருவன் இருக்க வேண்டுமல்லவா? அதைக்குறித்து இனி விசாரிப்போம்.

நான் நித்யனாய் அஶரீரியாயிருக்கும் எனக்கு ஶரீரம் எப்பொழுது வந்ததென்றால் பஞ்சபூத ஸ்ருஷ்டிக்குப்பின்னல்லவோ வந்திருக்கவேண்டும். இதற்குமுன் அதாவது பஞ்சபூத ஸ்ருஷ்டிக்குமுன் எனக்கு ஶரீரமில்லாமல் இருந்ததென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆதலால், நான் நித்யனாயும் ஜ்ஞானஸ்வரூபனாயு மிருக்கின்றேனென்று முந்தியேசொல்லியிருக்கின்றேன். இந்த ஜ்ஞானஸ்வரூபமே அறிவாயிருக்கின்றது. அறிவுவேறு, அந்த அறிவை அறியப்பட்டவன் வேறென்றுசொல்வதற்கு இடமில்லை. எப்படியென்றால், ஜ்வாலைவேறு, அக்நிவேறென்று சொல்வதற்கு எப்படி கூடாமையோ அதுபோலவே அறிவு வேறு ஜ்ஞா

ணம் வேறென்று சொல்வதற்குக் கூடாமையாயிருக்கின்றது. அக்நி ஜ்வாலையாயும், ஜ்வாலை அக்நியாயும், எப்படியிருக்கின்றதோ அது போலவே ஜ்ஞானமே அறிவாகவும் அறிவே ஜ்ஞானமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட ஜ்ஞானமுடையவனே பரப்ரஹ்மம், அந்த பரப்ரஹ்மமே நான்.

இதனாலேயே யல்லவா ப்ரஹ்மஜ்ஞானம் பரமாத்மாவென்றும் தத்வமஸி என்றும் வேதங்களில் சொல்லியிருப்பதுமேயன்றி "ததேகோவஸிஷ்ட ஸிவக்கேவலோகஃ" என்று ஸ்ரீ ஸங்கராசார்யரும் சொல்லியிருக்கின்றார். "ஸிவோஹம்" இந்த அர்த்தத்தை அனுசரித்துச்சொல்லியிருக்கின்றது.

இப்படி அறிவாயிருக்கும் என்னை யாராயினும் அடிக்கலாமா, அல்லது கத்தியினால் வெட்டலாமா, அக்நியால் தஹிக்கலாமா, ஜலத்தினால் நனைக்கலாமா, காற்றினால் அலையச்செய்யலாமா, பஞ்சபூத ஸம்பந்தமாகிய எது, ஸ்பர்ஸிக்கப்படும்? நான் ஒருவன் கைகளுக்கும் கண்களுக்கும் கருத்துக்கும் அகப்பட்டவனல்லன். அறிவாயிருக்கும், எனக்கு எந்தச்சொத்துக்களிலாயினும், ஈஷணத்ரயங்களிலாயினும், ராகத்வேஷங்களிலாயினும் அன்னபானாதிகளிலாயினும், மானாவமானங்களிலாயினும், லோபாலோபங்களிலாயினும் என்ன ப்ரயோஜனமுண்டு?

ஸரீர ஸம்பந்தமானவைகள் எத்தனையோ வருவதும் போவதுமுண்டு. அஸரீரியாகிய எனக்குச் சொந்தமானது ஒன்றுமில்லை. இப்பொழுது காமக்ரோதங்கள் எப்படி ஒழிந்தது? அவைகளையெல்லாம் நான் அறிந்த பின்னல்லவோ என்னைவிட்டொழிந்தன. இதற்குமுன் ஒழியென்றாலும் ஒழியுமோ?

எந்த மிலேச்சனே, எந்த ம்ருகமோ-ஒருவனுக்கு பார்யாளாய் முறைகொண்டுவந்தது. இப்படியே புத்ரர்களும் புத்ரிகைகளும் ஒவ்வொருவராய் முறைகொண்டு சந்தையிற் கூட்டம்போல் வந்து கூடிக்கொண்டிருக்கின்றார்கள். இப்படியாய் வந்தவர்களைப் போஷித்துக்கொண்டிருப்பார்கள். இந்த வரிசையுடையவர்கள் வருகிற ஜன்மத்தில் தூஷிப்பதும், இப்பொழுது இந்த ஸ்தலத்தில் நிலம் வாங்கி வீடுகட்டுவதும் இதுபோலவே மறுஜன்மத்தில் வேறு நிலம் வாங்கி வேறுவீடுகட்டுவதுமாய் இருக்கின்றார்கள். "சீ சீ" இது மிகவும் அறியாத்தன்மையா யிருக்கின்றது.

நான் இப்பொழுது க்ரஹிக்கவேண்டிய விஷயங்களை க்ரஹித்தேனு, முக்யமாய்ச் செய்யவேண்டிய விஷயங்களைச் செய்தேனு, இன்னும் ஏதாகிலும் குறைவுபட்டிருக்கின்றதா யோசித்துப் பார்ப்போம்.

"ஜ்ஞாநமேவ மோக்ஷா:" என்றிருக்கின்றது. ஆதலால், ஆத்மவிசாரணைசெய்வதே மோக்ஷத்திற்கிடமென்றிருப்பதால் ஆத்மவிசாரணைசெய்தபிறகு எந்த தபமும் ஜபமும் செய்யவேண்டியதில்லை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. ஆதலால், நான் இனி செய்யவேண்டியது ஒன்றுமில்லை.

இதற்கு த்ருஷ்டாந்தம் பரீக்ஷித்து, சுகப்ரஹ்மத்தினிடம் ஜ்ஞானேபதேசம்பெற்றபிறகு, மோக்ஷத்திற்கு வேண்டிய தபஸ்முதலானவைகள் ஏதாகிலும் செய்தாரா? ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தியினல் ஜ்ஞானேபதேசம்பெற்ற அர்ஜுனன் ஏதாகிலும் செய்தாரா? நான்மாத்ரம் ஏன் செய்யவேண்டும்?

ஜ்ஞானேபதேசமானபிறகு பரீக்ஷித்துக்கு ஸாவகாசமிருந்தபடியால் பகவானது குணாதிசயங்களைக்கேட்டு ஆன

ந்தித்தார். அதுபோலவே, நானும் பகவத்குணங்களைக் கேட்கின்றேன். அப்படி பகவத்குணங்களைக்கேட்பதினுல் மனம் தெளிந்து த்ருடமாய் நிற்கும். இப்படி மனம் த்ருடமாய் நிற்பதற்கு ஸத்ஸாங்கத்வமும் வேண்டும். இதற்கு ப்ரமாணம் :—

"ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம்
நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன்முக்திః."

ஸத்ஸங்கத்வே-ஜ்ஞானிகளுடன் ஸஹவாசம் உண்டாவதினுல், நிஸ்ஸங்கத்வம்-புத்ர மித்ர களத்ராதிகளின் மீதிருந்த ஆசைநீங்கும். நிஸ்ஸங்கத்வே-களத்ராதி ஸம்பந்தமில்லாமல் போவதினுல், நிர்மோஹத்வம்-அஜ்ஞானத்திற்கு மூலமாகிய மோஹம் இல்லாமல் நீங்கும். நிர்மோஹத்வே-மோஹம் நீங்குவதினுல், நிஸ்சலதத்வம்-அசலமாகிய பரதத்வம் உண்டாகும். நிஸ்சலதத்வே-அப்படிப்பட்ட பரதத்வமானநிஷ்டை உண்டானுல், ஜீவன்முக்திః-ஜீவன் முக்தியை அடையும்.

ஜ்ஞானிகளுடன் ஸஹவாசம் உண்டாவதனுல் புத்ர மித்ர களத்ராதிகளின்மீதிருந்த ஆசைநீங்கும். களத்ராதிகளின் ஆசை நீங்குவதினுல் அஜ்ஞானத்திற்கு மூலமாகிய மோஹம் இல்லாமல் நீங்கும். மோஹம் நீங்குவதினுல் அசலமாகிய பரதத்வமுண்டாகும். அப்படிப்பட்ட பரதத்வமான நிஷ்டை உண்டானுல் ஜீவன் முக்தியை அடையும் என்று ஸ்ரீ சங்கராசார்யர் சொல்லி இருக்கின்ருர்.

ஓம் தத் ஸத்.
ஸ்ரீ க்ருஷ்ண பரப்ரஹ்மணேநமః.

7B
7-45